435

உ

கடவுள் துணை.

# திருவாலங்காட்டில்
## எழுந்தருளியிராணின்ற
# நீலி கதை.

28 JUL 1922

இஃது,
இதுவரையினும்
நாடக ரூபமாக இருந்ததை
சிலர் வேண்டுகோளின்படி

செஞ்சி
ஏகாம்பர முதலியாரவர்களால்
கதைரூபமாக யெழுதப்பட்டு.

இவை

பே-ஆதிமூலமுதலியார்
அவர்களது

சென்னை,
ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்.

1921 [அணா 4

Q2 : 38.21S1C
N24
180295

உ

கடவுள் துணை.

திருவாலங்காட்டி

எழுந்தருளியிரா ... ன்ற

# நீலிகதை.

4335

26 JUL 1922

இஃது,

இதுவரையினும்

நாடக ரூபமாக இருந்ததை

சிலர் வேண்டுகோளின்படி

செஞ்சி

ஏகாம்பர முதலியாரவர்களால்

கதைரூபமாக வெழுதப்பட்டு

பே-ஆதிமூலமுதலியார்

அவர்களது;

சென்னை

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] [அணா 4.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
180295

26 JUL 1922
MADRAS

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும தெரியப்படுத்துவது யாதெனில் இந்நூலை இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரவர்களின் 1867௵ 25-வது ஆக்டு, 20-வது பிரிவு 6-வது விதியின் பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் எனது அநுமதியின்றி ஒருவரும் இந்தப் புத்தகத்தையாவது, இதிற் கூறும் விஷயங்களையாவது; இதிற்கூறும்விஷயங்களை மற்றப் புஸ்தகங்களுடன் சேர்த்தாவது, இதிற்கூறும் விஷயங்களையும் பெயரையும் மாற்றியாவது, சிற்சில விஷயங்களைக எடுத்தாவது, ஒருவரும் அச்சிடவாவது; அச்சிடும்படி செய்விக்கவாவது கூடாது. அப்படி மீறிச்செய்பவர்கள் ஷை ஆக்டின்படி சகல கஷ்டநஷ்டங்களுக்கு முள்ளாவார்கள்.

பே. ஆதிமூலமுதலியார்.

180295

உ

கடவுள் துணை.

# தந்திர விநோத கதை.

## முதற்பாகத்தின்

# விளம்பரம்.

ஆழி சூழுலகின்கண் வசிக்கும் ஆரிய நண்பர்கள்யாவத்திராட்க்கும் இன்னும் மற்றுமுள்ளவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்,

இதுவரையினும் அநேக கதைகளை வாசித்துக் களிப்படைந்திருந்த போதினும் இந்த தந்திரவிநோத கதையின் முதற்பாகத்தில் அடங்கிய முதலாவது வர்த்தகன்கதை 2-வதுபுலியும் எருதும் உறவாடிய கதை' 3-வது சந்நியாசி பொருளிழந்த கதை, 4-வது இடச்சியால் அம்பட்டச்சி மூக்கருப்புண்ட கதை, 5-வது மந்திமதிகெட்டு மாண்டகதை, 6-வது கடன்காரன் கதை, 7-வது திண்டிராமன் கதை, 8-வது சிங்கத்தை முயல்வென்ற கதை, 9-வது சிலப்பேன் கதை, 10-வது குஷ்டரோகி கதை, 11-வது துஷ்டபுத்தியினால்துன்பமடைந்த கதை, 12-வது ஈனருக்குபுத்தி சொல்ல இடர்நேர்ந்த கதை, 13-வது கொக்கின்கதை, பதின்மூன்றுக்கதைகளில் ஒவ்வொரு கதைகளை வாசிக்க சதா நகைப்பு தரும் யூகைகள் உண்டாகும் எப்பேர்க்கொத்த துன்பமாகிய விசனமிருந்தபோதினும் அவைகளைமறக்கச்செய்து நகைப்பை தரும். 10-முறை வாக்கினும் இன்னம் ஒருமுறை வாசிக்கலாமென்று அபேட்சையேதரும், கவனிப்பீராகவும்.

இதன் விலை அணா 2.

அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு

பே. ஆதிமூலமுதலியார்.

20-நெ. பெருமாள்கோவில் தெருவு,
சவுக்கார்பேட்டை போஸ்ட்.
மதரூஸ்

உ

கடவுள் துணை.

# நீலி கதை.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

ஏரோங்கும் வேளாள ரெழுபதுபேர் பழிகொண்ட
பேரோங்கும் நீலிகதை பேசவே—சீரோங்கக்
கந்தரொடு வாணியருள் கருத்திலுற யெண்ணுருந்
தந்திமுகன் தாளிணையே காப்பு.

## கதையின் வரலாறு.

சப்தநதிகளும் சூழ்ந்தோங்கப் பெற்றும் எக்காலத்திலுங் குறைவுபடாத நீர்வளப்பமுள்ளதாய் வாழச்சோலை, பலாச்சோலை, மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ளசோலைகள் அணி அணியாய் ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப் பெற்றதாய் சிதம்பரம், பஞ்சநதம், மத்தியார்ச்சுனம், சம்புகேசுரம் முதலான திவ்விய க்ஷேத்திரங்களுக்கொப்பாகிய க்ஷேத்திரங்களை இடையிலுடையதாய் விளங்குகின்ற காஞ்சிமாநகரத்தின்கண் காமாட்சி அம்மனோடு எழுந்தருளி இராநின்ற ஏகாம்பரநாதருடைய ஆலயத்திருப்பணிச்செய்யும் அந்தணர்களில் ஆதிசேஷனென்னும் ஓர் பிராமணன் திருமயிலாம்பூரில் தன்னுடைய மரபில் அன்னதாட்சி என்னும் மாதினை மணம் புரிந்து தன் பதியாகிய காஞ்சிபுறத்திற்கு அழைத்தேகிய நாள்முதல் மனைவியின் முகத்தை ஏறெடுத்துப் பாராமலும் எதிர்நின்றுப் பேசாமலும் தேவதாசியின் மோகவலையிற் சிக்கி அல்லும் பகலும் அவள் அடிமையாக விருந்தனன்.

அப்படி யிருக்கின்றபோது அன்னதாட்சியானவள் தன்னுடைய தாய் தந்தையர் தமையன் முதலானவர்களுடைய ஆசாபாசங்களையும் மரந்து கணவனே தெய்வமெனக் கருதி பதினாறு வருஷ காலமாய் சிறையிருப்பதுபோல் இருந்தும் கணவனுக்கு

கிஞ்சித்தேனும் மனம்!வெறுப்புண்டாகி இன்னமும் நாம் சும்மா
இருக்கப்போகாதென்று தன்னுடைய தாய் தகப்பன்மார்களை
வரவழைத்து அவர்களுடன் தன்னுடையகுறைகளை எல்லாம்ஆதி
யோடந்தமாகச் சொல்லியபோது அவர்களுங்கேட்டு மனம்பதை
பதைத்து அந்தட்சணமே ஆலயத் திருப்பணிச் செய்யும் அந்த
ணர்கள் ஆயிரம்பேரையும் கூட்டமாக அழைப்பிக்க அவர்களும்
வந்துஅன்னதாட்சியையும் அவளுடையதாய்தகப்பன்மார்க்களை
யுங் கண்டு எங்களை அழைப்பித்த காரியம் யாது தெரிவிப்பீர்க
ளென்றனர்.

அப்போது அன்னதாட்சியானவள் கண்ணீர்விட்டுக் கதரி
யழுது ஆயிரம் வேதியர்களின் அடிபணிந்து வாருமையா சுவாமி
களே தங்களை அழைப்பித்த காரியம் யாதெனில் என்னுடைய
புருஷனாகிய ஆதிசேஷனென்னும் வேதியர் என்னை விவாகம் செ
ய்த நாள்முதறகொண்டு என்முகத்தை ஏறெடுத்துப் பாராமலும்
என்னெனறுக்கேளாமலும் இரவும்பகலும் தேவதாசியின் வீடே
கதியாகவிருக்கின்றார் யானுமிங்குதனியாக சிறையிருக்கின்றேன்
சுவாமிகளே யென்று யேக்கமுற்றழுகிறபோது அப்போது ஆயி
ரம்பேர் வேதியர்களும் அன்னதாட்சியை தேற்றி அம்மணிநீ
யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் உன்புருஷனாகிய ஆதிசே
ஷனை அழைத்து விசாரித்து அவனுக்குத் தக்கபடி திட்டஞ் செ
ய்வித்து அவனுன்னை தேடிவரும்படியாகச் செய்கின்றோம். நீ உ
ன் தாய்வீடுபோய்ச்சேருமம்மாவென்று ஆயிரம்வேதியரும் அன்
போடுரைத்துச் சென்றனர்.

அதனபின்பு அன்னதாட்சியும் தாய் தந்தையர்களோடு திரு
மயிலாப்பூருக்கு வந்து சேர்ந்து தன்னுடைய தாயார்வீட்டில்சுக
மாக விருக்கின்றபோது ஓர் நாள் தினம் அன்னதாட்சியானவள்
தனனோடொத்த பிராமணப் பெண்களுடன் கூடிக்கொண்டு கெ
ங்கைக்குப்போகிறபோது அன்னதாட்சியின் முகத்தை அந்தப்
பிராமணப்பெண்கள் பார்த்து அடி உன் முகத்தில் மூதேவி இரு
க்கின்றாளென்றனர். அப்போது அன்னதாட்சியும் திடுக்கிட்டு
என்முகத்தில் மூதேவியிருக்க வேண்டியக்காரணமென்ன அதை
யான் அறியும்படி தெரியச்சொல்வீர்களென பிராமணப்பெண்க
ள் கேளாய் அன்னதாட்சியே நீ விவாகம் செய்துகொண்ட நாள்
முதலாய் புருஷனிடத்தில் சேராதவளாதலால் உன் முகத்தில்
மூதேவி வாசம பண்ணுகின்றாளென்றபோது அன்னதாட்சியும்

மனதில் கிலேசமுடையவளா... அப்பிராமணப் பெண்களுடன் ஜலந்திரட்டிக்கொண்டு ஆத்திற்குவந்துசேர்ந்து பிறகு பிராமண ப்பெண்கள் சொன்ன மூதேவியானவள் நமதுமுகத்தில் எத்தன் மையாக இருக்கின்றாள் பார்ப்போமென்று நிலக்கண்ணாடியிற் போய் தன்னுடைய முகத்தை உற்றுப்பார்த்து நின்றனள்.

---

## அன்னதாட்சி தன் புருஷனை

### நிலக்கண்ணாடியிற் காணுதல்

---

அப்படி நின்றும் பார்க்கின்றபோது தன்னுடைய புருஷனா கிய ஆதிசேஷனென்னும் மறையவன் பூரணச்சந்திரனைப் போல் நிலக்கண்ணாடியில் தோற்ற அன்னதாட்சியுங்கண்டு ஆவென்று அலறி தாவிப்பிடிக்கப்போகையில் மாயமாய் மறைந்துபோயின அப்போதவளும் இது என்ன புதுமையென்று ஏக்கமுற்றவளாய் வாயிற்சுரந்த உமிநீரை முழுங்கினள் அதுவே யவளுக்கு கெற்ப மாயின இங்ஙனமிப்படி யிருக்க காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதரு க்கு பிர்ம்மோச்சவம் நடந்தேறியபின்பு ஆலயத் திருப்பணிச் செய்யும் அந்தணர்கள் யாவர்களும் வரவு சிலவு கணக்குகளைப் பார்த்து பங்குபாகம்தீர்த்துக்கொள்ளும்படியாய் ஆதிசேஷனெ ன்னும் வேதியனைப்பார்த்துவாறுய் ஆதிசேஷா நீ கொண்ட மனை வியை விவாகம்செய்த நாள் முதற்கொண்டுதாய் வீட்டிற்தானே விட்டுவிட்டு தேவதாசியை வைத்துக்கொண்டிருக்கின்றபடியால் உனக்கு பங்கு பாகங்கிடையாதுதேவதாசியை விட்டுவிட்டு உன் மனையாளை அழைத்துக் கொண்டு வருவையாகில் பங்கு பாகம் கிடைக்குமென்றனர்.

### ஆதிசேஷனென்னும் வேதியன் தன் மனையாளை அழைத்துக் கொண்டுப் போகும் படியாய் திருமயிலைக்கு வருதல்.

அம்மொழியைக் கேட்ட ஆதிசேஷனென்னும் வேதியன் மனந் திடுக்கிட்டு எண்ணாதும் எண்ணி ஏக்கமுற்று அடடா கொண்ட பெண்சாதியினால் ஆலயத்திருப்பணி வேலையே போகி

ன்றதாக விருக்கின்றதே இந்த க்ஷணமே நாம் திருமயிலாப்பூரு க்குச் சென்று அன்னதாட்சியை அழைத்துக் கொண்டுவந்து நமது பங்கு பாபத்தை வாங்கவேண்டு மென்று கருதி காஞ்சீ புரத்தை விட்டு பிரயாணப்பட்டு திருமயிலாப்பூரில் மாமியார் வீடு வந்து சேர்ந்தனன் அப்படி வந்த மருமகப்பிள்ளையை மாமனாரும் மாமியாருங்கண்டு மகாசந்தோஷமோடு ஆசனமிட்டு அமரும்படி க்குச்செய்து பின்பு க்ஷேமா க்ஷேமங்களை விசாரித்து போஜன முதலானதும் அருந்திய பிறகு மருமகப்பிள்ளையாகிய ஆதிசேஷ னென்னும் வேதியன் மாமி மாமனாரைப் பார்த்து நமஸ்காரம் செய்து பெண்சாதியை அனுப்பவேண்டுமென்று கேட்டபோது மாமி மாமனாரும் சந்தேகமுற்று இதென்னமோகாரணம் தெரிய வில்லை என்றுதங்கள்மனதில் ஆலோசித்து மருமகப்பிள்ளையைப் பார்த்து வாராயப்பா ஆதிசேஷா நீ எங்கள் புத்திரியை விவாகம் செய்த நாள்முதல் இதுவரையிலும் பெண்சாதியென்கிற கியாப கமில்லாமல் இருந்தவனுக்கு இப்போது பெண்சாதியின் மேல் கியாபகம் வந்த காரணத்தைப்பார்த்தால் ஏதோ சூதாகத் தோ ற்றுகின்றன ஆதலால் உன்மனதில் களக்கமில்லாமல் வெளியிடு வையாகில் இப்போதே உன் பெண்சாதியை அனுப்பிவிடுகின்றோ ம் சொல்லுமென்றனர்.

அது கேட்டு மருமகப்பிள்ளையாகிய ஆதிசேஷனென்னும் வேதியன் மாமனாரையும் மாமியாரையும் பார்த்து சொல்லுகிறான் என்னிடத்தில் யாதொரு சூதுவாதுகளுமில்லை இப்போது காஞ் சிபுரத்தில் ஏகாம்பரநாதருக்கு பிரமோச்சவம் நடந்தேரிய பின்பு வரவுசிலவு கணக்குகளைப்பார்த்து பங்குபாகந் தீர்த்துக் கொள்ளும்படி யாக கூட்டங் கூடியபோது என்னோடொத்த ஆயிரம் பிராமணர்களும் என்னைப் பார்த்து அடா ஆதிசேஷா நீ கொண்ட பெண்சாதியை தாய்வீட்டில் விட்டுவிட்டு தாசிவீட் டிற் கடுமையா யிருப்பதினால் உனக்குப் பங்குபாகங்கொடுக்கமா ட்டோம் உன் பெண்சாதியை அழைத்துக்கொண்டு வந்தால் பங் குபாகம் கொடுப்போமென்றனர் அப்படியே நல்லதென்று யானு ம் அவர்கள் மொழியை சிரசின்மேல் கொண்டு என் பெண்சாதி யை அழைத்துக்கொண்டு போகும்படியாக வந்தேன் தாங்கள் தயவுசெய்து அனுப்பிவைக்க வேண்டுமென்று மகா வணக்கத்து டன் கேட்க மாமனாரும் மாமியாரும் மனமகிழ்ச்சியாகி மருமகப்

பிள்ளையைப் பார்த்து வாருமப்பா மருமகப்பிள்ளையே உன் இஷ்டப்படியே நாளையதினம் அழைத்துக் கொண்டுபோய் உன்னுடைய பங்கு பாகங்களை வாங்கிக்கொண்டு நீயும் உன் பெண்சாதியும் சுகமாக யிருக்கவேண்டும் யாங்களுங் கண்டு களிக்கவேண்டுமென்றனர்.

அம்மொழியைக் கேட்ட ஆதிசேஷனென்னும் வேதியனும் அவ்வாறே சம்மதித்து அன்றிரவு வொழிந்தவுடன் காலையிலெழுந்துக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு போஜனமுதலானதும் அருந்தியபின்பு தாய்தந்தையர் இருவரும் தங்கள் புத்திரியாகிய அன்னதர்ட்சியை அழைத்து வாருமம்மா அன்னதாட்சியே! உன்னுடையகணவனோடு நீயும் சென்று கணவன் சொற்றவறாமல் புத்திமதியோடு வாழ்ந்து வருவாயம்மணி யென்று தாய் தந்தையர் கூறியதைக் கேட்ட அன்னதாட்சியும் தாய் தந்தையர்களைப் பணிந்து கேளுங்கள் அன்னை தந்தையர்களே யான் என்னுடைய புருஷனோடு போகின்றதற்கு யாதொரு ஆடங்கமுமில்லை ஆனால் என் மனதில் ஓர் சந்தேகமிருக்கின்றது அது யாதெனில் என்னைக் கலியாணஞ்செய்த நாள் முதற்கொண்டு இன்னாள் வரையினும் என் புருஷன் என்னோடு வார்த்தையாடினதே யில்லை அப்படிக்கிருக்க இப்போது நான் எப்படி அவருடன் தனியாகச் செல்குவேனென்று தையலானவள் தயங்கி மயங்கி பயந்தோடிய போது தாய் தந்தையர்கள் தங்கள் புத்திரியாகிய அன்னதாட்சியை தேற்றி வாராய் எங்கள் அருமைக் கண்மணியாகிய மகளே நீ இதற்காகவா பயந்துவிட்டாய். அப்படியாங்களும் உன்னை தனியாக அனுப்புவோமா? இப்போது உனக்குத் துணையாக உன் தமையனையும் அனுப்பிவைக்கிறோம், அம்மணி யென்ற போது அன்னதாட்சியுங் கேட்டு தன் மனதில் இருந்த பயமானது தெளிந்து சந்தோஷமாகினள்.

## ஆதிசேஷன் தன் மனைவியாகிய அன்னதாட்சியை அழைத்துக்கொண்டு காஞ்சி நகருக் கேகுதல்.

அதன்பின்பு ஆதிசேஷனென்னும் வேதியனும் மாமி மாமனார் முதலாகிய பெரியோர்களை சேவித்துக்கொண்டு பிறகு மாமனார் கொடுத்த வெகுமதிகளையும் பெற்றுக்கொண்டு மாமன் மாமி

யார் முதலானவர்களிடம் விடைபெற்று தன்னுடைய மனைவி அன்னதாட்சியையும் அவளுக்குத் துணையாகவனும் அவள் தமையனுகிய நீலகண்டனையும் அழைத்துக்கொண்டு திருமயிலாப்பூரை விட்டு நடந்து காஞ்சீபுரத்தை நோக்கி வருகிறபோது அன்னதாட்சி கெர்ப்பவதியாக இருப்பதை ஆதிசேஷனென்னும் வேதியன் கண்டு மனமுருகினவனுய் தன் புத்தியில் ஒன்றுந் தோன்றுமல் என்னென்று எண்ணுகிருனெனில், அடடா இதுவென்ன அவகேடாக இருக்கின்றதே நாம் இதை அவள் தாய்வீட்டிலேயே அறிந்திருந்தோமானுல் ஏதாகிலும் ஒரு போக்கு சொல்லி விட்டுவிட்டு வந்துவிடலாமே அதை நாமும் அறியாமல் அழைத்துக்கொண்டு வந்துவிட்டோம் அன்றியும் இவளை நான் விவாகஞ்செய்த நாள்முதல் இதுவரையினும் இவளிடம் நான் சேராதிருப்பது அவள் தாய் தந்தையர்களுக்கும் என்னேடொத்த ஏகாம்பரநாதருடைய ஆலயத்திருப்பணி செய்யும் ஆயிரம் பிராமணுளுக்கும் தெரிந்தவிஷயம் ஆதலால் நாமிப்போதிவளை நவமாத கெர்ப்பவதியா யிருப்பவளை அழைத்துக்கொண்டு போவோமானுல் நம்மோடொத்த வேதியர்கள் யாவரும் நம்மை இழிவாகச் சொல்லுவார்களே இதற்கென்ன உபாயம் செய்யலாமென்று ஆலோசித்துக்கொண்டே அடவிவழியாக நோக்கி நடந்தனள்.

## ஆதிசேஷ னென்னும் வேதியன்
## அன்னதாட்சியை
## கொலைசெய்ய யெத்தனித்தல்.

அப்படி போகின்றபோது ஆதிசேஷனென்னும் வேதியன் தன் மனதில் கபடுவைத்து ஜன சஞ்சாரமில்லாத நடுகாட்டில் திருதிருவென்று சுழன்று பூமியின்மேல் விழுந்து கண்களை மூடிக்கொண்டு சுவாசபந்தனஞ் செய்து பிரேதத்திற்குச் சமானமாகயிருக்கையில் அன்னதாட்சியுங் கண்டு வாயிலும் வயிற்றிலும் அறைந்துக்கொண்டு ஐயையோ தெய்வமே இதுவென்ன விபரீதக்காலம் என்னை விவாகம் செய்த நாள் முதற்கொண்டு இன்னாள் வரையினும் என் முகத்தை ஏறெடுத்துப் பாராமலிருந்தவர் ஈஸ்வரனுடைய கிருபாகடாட்சத்தினுல் இப்போதவரே நேராகவந்து என்னை அழைத்துக்கொண்டு வந்து அனுதி பட்சியைப்போல் இந்த அடவியில் விட்டுவிட்டு மூர்ச்சையாகி விட்டாரே இதற்கு

நான் என்னசெய்குவேன் யான் பெ[illegible]ணைப்பிறந்தக் கொள்ளை யையாருடன் சொல்லி யாறுவேன என்று கண்ணீர் பெருக கணவன்மேல விழுந்துப் புரண்டு அழுகின்ற தங்கையாகிய அன்னதாட்சியை தமையனாகிய நீலகண்டன் தேற்றி அம்மணி யேன் அழுகின்றாய் உன் புருஷனுக் கொன்றுமில்லை அவர் போஜனம் செய்து வெய்யலில வந்தபடியால் களையானது வந்து மூடிற்று அது இன்னம் சற்றுநேரத்திற்குள் தெளிந்துவிடும் பயப்படவேண்டாம் நீ அவர் அருகிற்றானே பத்திரமாகயிரும் நான் இந்த அடவியில் எங்கேயாகிலுந திரிந்து ஜலங்கொண்டு வருகின்றேன் அம்மணியென்று தங்கையர்க் குறுதிசொல்லி தானுங கையிற் சொம்பை யெடுத்துக்கொண்டு ஜலங்கொண்டு வரும்படியாகச் சென்றனன்.

அப்போது அன்னதாட்சியும் தன்னுடைய புருஷனுடைய முகத்தில வெய்யல படாமறபடிக்கு தன்னுடைய முந்தாணியை விரிததுப் பிடிதது கண்ணீர்விட் டழுதுகொண்டு இருக்கின்றபோது கபட மூர்சசையாக விழுந்த ஆதிசேஷனெனனும வேதியன திடீலென றதாக யெழுந்து இரண்டு கண்களும கோவைப்பழம்போல சிவக்க மீசையானது துடி துடிக்க பறகளை நறநறவென்றதாகக கடித்து அன்னதாட்சியைப் பார்த்து அடி வாடி அன்னதாட்சியே உன்னை நான விவாகம் செய்த நாள் முதற்கொண்டு இன்றையவரையிலும உனனிடததில ஒருநாளுங கூடி சுகித்ததில்லையே அப்படியிருக்க நீ கர்ப்பவதியான காரணம் யாது அதை யான் அறியும்படியாக உண்மையாச சொன்னாலாச்சு இல்லாவிட்டால் உன்னை இந்தட்சணமே உயிர்வதை செயதுப்போடுவேன சீக்கிரம் சொல்லடியென்று கேட்கையில் அன்னதாட்சியும் அங்கடாதியகதமும நடுநடுங்கி அறிவானது கலங்கி பிரமித நின்றனள்.

அப்போது ஆதிசேஷனென்னும வேதியனுக்கு அதிக கோபமானது உண்டாகி அன்னதாட்சியின் சிகையைப் பிடித்துகையினால் மாறிமாறி அடிமேலடி அடிக்கின்றபோது அன்னதாட்சியும் அடியைப் பொறுக்கமாட்டாமல எண்ணுகிறாள் ஐயையோ நாமும அறியாமற படிக்கு தமையனையும தண்ணீரக கனுப்பி விட்டோமே இந்தவேதியர் கொண்ட சூதையும் அறியாமற போனோமே நாமும யாதொரு பாவத்தையும் அறியோமே ஆயினும் நமககு உண்டான கெர்ப்பத்தின உண்மை சொல்லி விடுவோம

அதன்பின்பு தெய்வச்செயல் எப்படியானாலும் சரியென்று மனந்
துணிவுகொண்டு கணவனைப்பார்த்து கேளுமையா என் பிராண
நாதரே யான் யாதொரு பாவத்தையு மறியேன் யான் என் தாய்
வீட்டி லிருக்கும்போது ஓர்நாள் தினம் என்னோடொத்தப் பிராம
ணப்பெண்களுடன் கூடிக்கொண்டு கங்கைகரைக்குப்போகையில்
அவர்கள் என்முகத்தைப்பார்த்து அடி உன் முகத்தில் மூதேவி
யிருக்குதென்றார்கள் அதனைக் கேட்டு யான் அட்சணமே ஆத்தி
ற்கு வந்து அந்த மூதேவி எத்தன்மையாக யிருக்கின்றாள் பார்ப்
போமென்று நிலக்கண்ணாடியின் எதிர் நின்றுப் பார்க்கையில் அப்
போது தேவரீர்போல் அந்த நிலக்கண்ணாடியில் என் கண்ணிற்
குத் தோற்ற யானுங்கண்டு ஆவென்று அலறிட அப்போது வா
யில் சுரந்த உமிழ்நீரை உள்ளுக்கு முழுங்கினேன் அதுவே கெர்
ப்பமானதே யல்லாமல் வேறொரு பாபத்தையும் யானின்றளவு
மறியேன் இனிமேல் தேவரீர் சித்தமெப்படியோ வென்றனள்.

அதுகேட்டு ஆதிசேஷனென்னும் வேதியனும் அடி திருடி
என்னவார்த்தை சொன்னாய் இது ஆருக்கொப்பாகும் ஆச்சரிய
மாக விருக்கின்றதே (அச்சில்லாமல் தேரோடுமா ஆம்படையா
னில்லாமல்பிள்ளையுண்டாகுமா) ஆ ஆ உன்னைப்போலொத்தப்
பெண்கள் இன்னம் பத்துபேரிருப்பாராகில் இந்த உலகம் என்ன
பாடுபடுமோ அறியேனடி பாதகியென்று அன்னதாட்சியைப் பிடி
த்து பூமியிற்றள்ளி கழுத்தைப் பிடித்து முறுக்கி உயிரைப்போ
க்கி விட்டு அவள் பூண்டுக் கொண்டிருந்த ஆடையாபரணம்
யாவையுங் கழட்டி மூட்டைக் கட்டிக்கொண்டு அந்தட்சணமே
ஆதிசேஷனென்னும பிராமணன் அவ்விடம்விட்டு நீங்கி காஞ்சீ
புரத்திற்கு வந்து தேவதாசியின் மனைக்குச்சென்று அவளோடு
நடந்த விருத்தாந்தங்களை ஒன்றும் வெளியிடாமல் அன்னதாட்சி
யின் ஆடையாபரணங்களைக் கொண்டுபோய் அவள் கையில்
கொடுகக அவளும் வேண்டா மென்றுத் தடுக்க அப்போது ஆதி
சேஷன் ஆடையா பரணங்களைக் கொண்டுபோய் பெட்டியில்
வைத்துப் புதைக்கப் போகையில் அங்கவனைப் பாம்புக் கடித்து
இறந்துவிட்டனன்,

## தண்ணீர் கொண்டு வரும்படியாகப் போன நீலகண்டன் வந்து தங்கையைப் பார்த்து விசனப்படல்.

அங்கவனப்படி இறந்துபோக இங்ஙனந் தண்ணீர்கொண்டு
வரும்படியாகப்போன நீலகண்டனானவன் தண்ணீர்தேடி மொண்

டுக்கொண்டு தங்கையிடம்வந்துபார்க்கையில [illegible] நிர்வாணமாகமாண்டுக்கிடப்பதைப்பாத்து சிவசிவாவென்றுதன் இருகண்களை மூடிக்கொண்டு சற்றுநேரம் துக்கித்து பின்பு தன் துக்கத்தை தானே தேற்றிக்கொண்டுநெடுநேரம்ஆலோசித்து பிறகு தன்மனதில் என்ன எண்ணுகிருனெனில், நமது தங்கை கர்ப்பவதியாகயிருந்தமையால் நாம் விவாகம்செய்தநாள்முதற்கொண்டு இவளிடம் கூடி நாம் சுகம் அனபவிக்கவில்லையே இவளுக்கு கர்ப்பந் தரித்த தெவ்வாறென கோபங்கொண்டு மனைவியைக்கொல்லவேண்டுமென்று மனதிலெண்ணி நாமிருந்தால் கொலைசெய்ய தடைப்படுமென்று ஆலோசித்து சூதாக மூர்ச்சைபாய் விழுந்தவனுக்கும் அதை அறியாமல் நமது த்ங்கை அழுது புலம்பும்போது நாமும் தெரியாமல் ஜலங்கொண்டுவரும்படியாகப் போய்விட்டோம் அந்தசமயம் மூர்ச்சையாய் விழுந்த வேதியன் எழுந்து தங்கையைக் கொலைசெய்துவிட்டுத்தான ஓடிப்போய்விட்டாபோல இருக்கின்றன. ஆ ஆ தெய்வமே இந்த அனியாயத்திற்கு என்னசெய்வேன் என்று பிர்மித்து நின்றனன்.

அப்படி நின்றவன் மறுபடியும் தன்மனதில் என்னஎண்ணுகிருனெனில், நமது தங்கை மாணடவிடததிலேயே நாமும மாண்டுவிடுவதே உத்தமமெனறு தன் இருகண்களையும் கெட்டியாக மூடிக்கொண்டு தங்கையின் அருகில்வநது குந்தி தன்னுடைய கைவிரலின் நிகததினுல் அவள் வயிறறைக் கீறி கருவைக் கையிலெடுத்து என்ன சொலலுகிருனெனில, திரிமூர்த்திகளின் சாக்ஷியாகவும், சந்திரசூரியர் சாக்ஷியாகவும, ஆகாயவாணி பூமிதேவிசாக்ஷியாகவும், இந்த கருவானறு ஆதிசேஷனென்னும் வேதியனுக்கே உண்டானதாகில் இந்தக்கருவைகள்ளிச்செடியினபேரில் எரிந்துவிடுகிறேன் எந்தக்காலத்திலேனும் இப்பழிக்குப்பழிவாங்கும்படியாக வந்துக் கள்ளிக்கொடியைக கிள்ளினுல் பிள்ளையர்கவேணும் கருவேலன்காயை அறுத்துக் கட்டினுல் சிலங்கையாக வேணும் என்று மூன்றுதரம் சொலலி கள்ளிசசெடியினபேரில் போட்டுவிட்டு பிறகு அவ்விடத்திலேயே தனனுயிரையும் மாய்த்துககொண்டனன,

## பார்வதி பரமேஸ்வரனை நோக்கி
## ப்ழிக்குப்பழிவாங்க கேட்குதல.

இப்படியாக இருக்கின்றகாலத்தில் ஓர் நாள் திள்ம கைலாயத்தில் பார்வதியானவள் பரமேஸ்வரனைபபார்தது வாருமையா சுவாமி என் பிராணநாதரே பூலோகத்தில் என்ன புதுமை அதனை

எனக்குத் [illegible]லாந்தருள வேண்டுமென்றுங்கேட்க பரமேஸ்வரனும கிருபைகூர்ந்து கேளாய உமையே ஆதிசேஷனென்னும் வேதியன் அன்னதாக்ஷி என்னும மாதினை மணம்புரிந்தனன் அப்படி மணம்பபுரிந்தவன் மனைவியின முகத்தைப்பாராமலதேவதாசியின் மோகவலையிற் சிக்கியிருந்தனன. அப்போதவன் மனைவியானவள் மனம்சலித்து தன் தாய்வீடுவந்துசேர்ந்திருக்கின்றபோது ஓர் நாள தன்னோடொத்தப்பிராமணப்பெண்களுடன் சேர்ந்துக்கொண்டு கங்கைக கரைக்கேகையில் அப்போதவர்கள் அன்னதாக்ஷியைப்பார்த்து அடி உன முகத்தில மூதேவி யிருக்கிறாளென்றனர். அதுகேட்டு அன்னதாக்ஷியும் ஆத்திற்குவந்து தண்ணீர்க்குடத்தை இறககிவிட்டு அந்த மூதேவி எத்தன்மையாயிருக்கிறாளென றுநிலககண்ணாடியின முனபோய்நின்றுபார்க்கையில் அவள்புருஷன்போல அக்கண்ணாடியிற்றோற்ற அவனைக்கண்டுமோகித்து அவள் வாயிலசுரநத உமிழ்நீரை உள்ளுக்குமுழுங்கினள். அதுவே கருவாய் தரித்து உருவாய் வளர்ந்துவந்தன.

அப்படியிருக்க இங்ஙனம் காஞ்சிபுரத்தில் ஆதிசேஷனென்னும்வேதியனுடைதத ஆயிரம ப்ராமணாகளுமஅவனைப்பார்த்து அடா ஆதிசேஷா நீ கொணடபெண்சாதியை தாய்வீட்டில்விட்டுவிட்டு தாசிவீட்டிலேயே அடிமையாயிருக்கின்றமையால ஆலயத திருப்பணிவேலையைவிட்டு நீக்கிவிடுவோ மெனறபோது ஆதிசேஷனும பயந்து அந்தக்ஷணமே மாமபார் வீட்டிற்குவநதுமாமி மாமனாரைக கணடு வணஙகி எனனுடைய சமாச்சாரங்களையெல்லாம்தெரியச்சொல்லி போஜனமுதலானது மருநதி மாமி மாமனிடததில விடைபெற்றுக்கொணடுமனையாளையும மனையாளுக்குத துணையாக அனுப்பிய அவள்தமையனையும அழைததுக்கொணடு காஞ்சீபுரத்தைநோக்கிவருகிறபோது அவள் காபபவதியாகயிருப்பதை வேதியனகணடு சூதாக மூாசசையாய விழுநதான அபபோதவன மனைவியும அசசூதை யறியாமல அண்ணனைத தணணீர்கொண்டுவரும்படியாக அனுப்பினள். அவன தண்ணீர்கொண்டுவரும்படியாக போனவுடனே மூர்ச்சையாய் விழுநதவேதி எழுந்து மனையாளைபபார்தது அடீ திருடி உன்னை நானவிவாகம் செயத நாள்முதலாய் உனனிடததில் யான சேர்நததில்லையே உனக்கு எவவாறு கொபபமுணடாயிற்றுசொல்லடியெனறபோது அவளும பயநது கொபபமுணடாயினதை உண்மையாகச்சொல்

வினள். அதை அவன் ஒப்புக்கொள்ளாமல் அவளைக் கொலைசெய்துவிட்டு அவளுடைய ஆடை ஆபரணங்களைக்கட்டிக்கொண்டுபோய் தேவதாசியிடத்தில்கொடுக்க அவளும் அது சிவன்சொத்துவேண்டாமென்று தடுக்க அதையவன் கொண்டுபோய் புழக்கடையில் வைக்கப்போகையில் அங்களனைப்பாம்பு கடித்திறந்துவிட்டான். அப்படியிருக்க இங்ஙனம் தண்ணீர்க்குப் போனவன் தண்ணீர்கொண்டுவந்து தங்கையைப்பார்க்க தங்கை மரணமடைந்திருப்பதைப்பார்த்து மரணம் நேரிட்ட காரணத்தையுமறிந்து தங்கையோடு நாமும் மரணமாவதே சரியென்று தீர்மானித்து தங்கையினுடைய வயிற்றைக்கிறி வயிற்றிலிருந்த கருவை கையிலெடுத்து திரிமூர்த்திகளையும்சந்திரசூரியரோடுஆகாயவாணிபூமிதேவியையும் சாக்ஷிவைத்து இந்தக்கரு ஆதிசேஷனென்னும்வேதியனுக்கே உண்டானதாக விருந்தால் இப்பழியை யாரொருவர் ஏற்றுக்கொண்டு வருகிறார்களோ அவர்கள் கள்ளிக்கொடியை கிள்ளினால் பிள்ளையாகவேண்டும் கருவேலங்காயை அறுத்துக் கட்டினால் சிலங்கையாகவேணுமென்று சபித்து அந்தக் கருவை கள்ளிச்செடியின்பேரில் எரிந்துவிட்டு தானும் அவ்விடத்திலேயே உயிரை மாய்த்துக்கொண்டான். இதுதான்பூலோகத்தில் நடந்த அதிசயமென்று பரமசிவனுரைத்தனர்.

அம்மொழியைக்கேட்டுணர்ந்த பார்வதாதேவியும் அங்கம்பதறி பரமசிவனைப் பணிந்து கேளுமையா சுவாமி அந்தப்பெண்பழியை யாரும் ஏற்றுக்கொள்ளாமற்போனார்களே தேவரீர் கிருபை செய்து எனக்கு விடைதருவீராகில் யான் பூலோகத்திற்சென்று அந்த ஒருபெண்பழிக்கு எழுபத்தோர் பழிவாங்கிவருகின்றேனென்று உமையவள்கேட்டபோது பரமசிவன் வாராய் பார்வதியே ஏன் வீண்சபதஞ் செய்கிறாய் இந்த ஆதிசேஷனென்னும் வேதியன் முதல்பிறப்பு பிராமணனாகப் பிறந்தான். இரண்டாவதுப்பிறப்பு வேளாளனாகப் பிறந்தான். இப்போது மூன்றுவதுப் பிறப்பு செட்டியாகப் பிறந்தான். அவனோடு மந்திரவாளும்பிறந்திருக்கின்றன ஆதலால் அவனை ஜெயிக்க திரிமூர்த்திகளாலும் முடியாது நீ ஏன் வீண்பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறாய் என்றபோது பார்வதியானவள் கேட்டு மனமடங்காத கோபாக்னியோடு பரமசிவனைப்பார்த்துசொல்லுகிறார் வாருமையா சுவாமி பரமேஸ்வரரே நானந்த ஒரு பெண்பழிக்கு எழுபதோர்

பழிவாங்காமற் போவேனேயாகில் மறுபடியும் இந்தக் கைலாயத்தில் கால் வைக்கின்றதேயில்லை பூலோகத்திற்றானே பிசாசவாகப்போகின்றேன் என்று சபதஞ் செய்துக்கொண்டு பரமசிவனிடத்தில் விடைகள்பெற்று பூலோகத்தை நாடிவந்தனள்.

## பார்வதி நீலி நீலனைப் பிறப்பித்தல்.

அப்படி வந்த உமாமயேஸ்பரீ யானவள் தன்னுடையத் தமையனாகிய மகாவிஷ்ணுவை நோக்கி தபஞ்செய்கிறபோது ஸ்ரீமந்நாராயணரும் அறிந்து தங்கையினுடைய தபசுக் கிரங்கி கெருடவாகனாரூடராய் பார்வதாதேவிக்கு முன் பிரசன்னமாக வந்து தோன்றியபோது பார்வதாதேவியுங் கண்டு நமஸ்கரித்து நிற்கையில் மகாவிஷ்ணுவானவர் உமையவளைப் பார்த்து வாருமம்மா தங்கையே நீ கயிலாயத்தைவிட்டுபூலோகத்திற்குவந்துஎன்னைவேண்டி அழைப்பித்தக் காரணம் யாது தெரியச் சொல்லுமம்மா தங்கையேயென்றபோது உமையபரஞ்சோதியும் தமயனைப்பணிந்து தான் பரமசிவனோடு செய்துக்கொண்டுவந்த சபதமாகிய சமாச்சாரங்கள் யாவும்ஆதியோடந்தமாகச் சொல்லினள் அதுகேட்டு ஆதிமூலக்கடவுளும் கிருபைகூர்ந்து வாருமம்மா தங்கையே நீயாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் திருவாலங்காட்டில் சந்திரசேகரனென்னும் வேளாளனும் அவள்மனைவி நீலாம்பாளென்பவளும் வெகுநாளாய் புத்திரபாக்கிய மில்லாமல் மனவருத்தமடைந்திருக்கின்றாள். ஆதலால் அவர்களுடைய வயற்றில் அடவியில் இறந்துக்கிடக்கும் பிராமணப்பெண் ஆவியையும் அவளுடன் மாண்டுகிடக்கும் அவள் தமையனுடைய ஆவியையும்பிடித்து நீலாம்பாள்வயற்றில் அடைத்து நீலியும் நீலனுமாக பிரப்பிப்பாயாகில் நீ கோரியஎண்ணம் முடியுமென்று சொல்லிவிட்டு மகாவிஷ்ணுவும் வைகுந்தமேகினர்.

அதன்பின்பு உமாபார்வதியும் அந்தட்க்ஷணமே அண்ணனுரைத்தஎண்ணம் அடவியில் இறந்துகிடக்கும்இருதரத்தாருடைய ஆவியையும் பிடித்துக்கொண்டுவந்து திருவாலங்காட்டில் வாசஞ்செய்யும்படியான சந்திரசேகரனெனும்வேளாளனுடைய மனைவி

யாகியநீலாம்பாள் வயிற்றிலடைக்கஅவளும் நவமாதமுங்கடந்து
அவள் முன் ஆண்குழந்தையும் பின் பெண்குழந்தையுமாக ஈன்ற
னள் அப்போது சந்திரசேகரனும் சிந்தையானது மகிழ்ந்து தான
தருமங்கள் முதலானதும் செய்துபிறகு புரோகிதர்களை அழைப்
பித்து புத்திரன் புத்திரிக்கும் நாமகரணம் செய்விக்கும்படியாகச்
சொல்ல அப்படியே புரோகிதர்களும் பஞ்சாங்கம் முதலானதும்
பார்த்து நீலன் நீலி என்று நாமகரணம் சூட்டினர். தந்தையாகிய
சந்திரசேகரனுங்கேட்டுமகிழ்ந்துபுரோகிதர்களுக்குவெகுமதிகளை
கொடுத்தனுப்பிவிட்டு புத்திரன் புத்திரியையும் நாளொரு மேனி
யும் பொழுதொருவன்ணமுமாக வளர்த்துக்கொண்டுவந்தனர்.

அப்படி வருகிறபோது பார்வதாதேவியுங்கண்டு இனி நாம்
சும்மாயிருக்கப்போகாதென்று கருதி நீலியுடைய உயிரைப் பிடி
த்து விஷ்ணுவிடம் ஒப்பித்துவிட்டு அந்தஉயிர்க்குபதிலாய் தான
ந்த நீலியுடைய பொந்திக்குள் பிரவேசித்து பகலிற் கெல்லாம்
பாலர்கள்போல் படுத்தவிடத்திலேயயிருந்து இரவில் நடுராத்திரி
வேளையில் எழுந்து கோரமாகிய தூலதேகங்களை எடுத்துக்கொ
ண்டு திருவாலங்காடு முழுதும் நீலியும் நீலனுமாகத்திரிந்து அங்கு
ள்ள ஆடுமாடுமுதலானவைகளையெல்லாம் அதா அதம்செய்துக்
கொண்டு வருகையில் அவ்வூரில் வாழும்படியான குடிகள் முத
லான யாவர்களும் நாள்தோறும் குய்யோமுறையோவென்று கூவி
அழுதுக் கொண்டு சந்திரசேகரனென்னும் வேளாளனிடத்தில்
சொல்லிமுறையிட்டபோது குடிகள் முதலானவர்களுக்கும் தயி
ரியஞ்சொல்லி அனுப்பிவிட்டு பிறகுதலையாரிகளை அழைத்துஅடா
தலையாரிகளே என்னடா நாள்தோறும் குடிகள் முதலானவரும்
வந்து ஆடுபோச்சுது மாடுபோச்சுது என்று அழுகின்றார்களே
நீங்கள் என்னக்காவல் காற்கின்றீர்கள் இன்றிரவிற்குள்ளாக அந்த
திருடர்களை பிடித்துக்கொண்டு வந்தாலாச்சுது அல்லாவிட்டால்
உங்களுக்கு ஆக்கினைநேருமென்று கடூரமாகச்சொல்லினன்.

அதனை கேட்டுணர்ந்த காவற்காரராகிய தலையாரிகளும் நடு
நடுங்கி பயந்துதேவரீர் உத்தரவின்படியே இன்றிரவிற்குள் அந்த
கள்ளரை பிடித்து வந்து ஒப்பிக்கின்றோம் சுவாமி என்று விடை
பெற்றுக்கொண்டுபோகின்ற தலையாரிமார்கள் ஒருவருக்கொருவர்
என்னபேசிக்கொள்ளுகிறாறெனில் அடடா இதுவென்ன விருக்கி
ன்றதே இதுவரையிலும் நமது ஊருக்குள் கள்ளரென்கிற காப

றுவை காதிலுங்கேட்டதில்லை கண்ணிலுங்கண்டதில்லை ஆதலால் இன்றிரவு நாமெல்லோரும் ஊரைச்சுற்றிக்கொண்டு ஜாமஜாமத்திற்குள் எஜமானை எச்சரித்துக் கொண்டிருப்போமானால் நாம் கார்க்கின்ற காவல் எஜமானுக்கும் உண்மையாக விருக்குமென்று அனைவரும் ஒத்துப்பேசிக்கொண்டு அன்றிரவு முதல்ஜாமம் இரண்டாஞ்ஜாமம் வரையினும் ஊர்முழுதும் சுற்றிக்கொண்டு எஜமானை எச்சரிக்கும்படியாக நாடிவருகையில் நீலன் நீலி என்னும் இரண்டு குழந்தைகளும் அரண்மனையை விட்டு வெளியே வந்து அகோரமாகிய ரூபங்களை எடுத்துங்கெரண்டு ஆகாயத்திற்கும்பூமிக்கும் ஒன்றாகவாயை திறந்துக்கொண்டுவருகின்றதை தலையாரிகள் கண்டுபயந்தோடிவிட்டனர்.

அப்போது நீலியும் நீலனும் எப்போதும்போல ஊருக்குள் பிரவேசித்து ஆடுமாடுகளையெல்லாம் அதா அதம்செய்துவிட்டுதங்களுடைய அரண்மனை வாயலில் வந்துநின்று எப்போதும்போல் குழந்தை உருவாகி அரண்மனைக்குள் பிரவேசித்து தாய்தந்தையர்களுக்கு மத்தியில்போய் சயனித்துக்கொண்டனர். இதுகளையெலாம் பயந்தோடிய தலையரிகள் பதுங்கிக்கொண்டு பார்த்திருந்தனர். அன்றிரவு நீங்கி சூரியபகவான் உதயகிரியில் உதயமானவுடன் நேற்றைய தினம்போல் அன்றையதினமும் குய்யோமுறையோவென்று கூவிக்கொண்டு வருகையில் சக்திரசேகரனென்னும் வேளாளன்கண்டு கோபங்கொண்டு நாம்நேற்றையதினம் தலையாரிசளுக்கு எவ்வளவோ திட்டஞ்செய்திருந்தும்அஜாக்கிரதையாக இருந்தார்கள் அல்லவா வென்று தலையாரிகள்மீது கோபித்துக் கொண்டிருக்கையில் தலையாரிகள் அனைவருங் கூட்டமாகக்கூடிக்கொண்டுவந்து சந்திரசேகரனென்னும் தங்கள் எஜமானைச்சேவித்து எதிரே நின்றார்கள்.

அப்படிநின்ற தலையாரிமார்களை சந்திரசேகரனென்னும்வேளாளன் பார்த்துக்கோபாக்னியோடு அடா காவற்காரர்களேநேற்றையதினம் ஜாக்கிரதையாகக் காவலைக் காருங்கோளென்று திட்டஞ்செய்து வைத்திருந்தும் நீங்கள் எங்கே நித்திரைசெய்துக் கொண்டிருந்தீர்களோ அல்லது களவுசெய்வோர்களுக்கு உளவாகஇருக்கின்றீர்களோ ஊர்குடிக்கு நீங்களே ஜகுனியாகத்தோன்றினாற்போலிருக்கின்றதே இனிஉங்களை சும்மாவிடப்போகிறதில்லை கள்ளர்களை கொண்டுவந்து ஒப்பித்தாலாச்சுது இல்லாவிட்டால் உங்களைசிறையிலடைப்பேனென்றுசீறிக்கோபமீறிக்கூறிய

போது தலையாரிகளுக்கெல்லாம் தலைவனாகிய பெரிய தலையாரியான
வன் கேளுமையா சுவாமி எங்கள்பேரில் கோபித்துக்கொண்டால்
யாங்களென்னசெய்வோம் இராத்திரிதினம்ஓர்புதுமையான துநடந்
திருக்கின்றது அதை தங்களுக்குரைக்க எங்களுக்கு பயமாகவிரு
க்கின்றதுதேவரீர்சொல்லும்படியாகத்திருவுளம்பற்றினால் அந்தர
கசியங்களை தங்களுக்குவெளியிடுகிறோம் சுவாமியென்றனர்.

அப்போது சந்திரசேகரனென்னும் வேளாளன் தலையாரிக
ளைப்பார்த்து அடா தலையாரிகளே அப்பேர்கொத்தரகசியமென்
ன அதனை சீக்கிரம் வெளியிடுவீர்களென்று ஆக்யாபிக்க தலையாரி
கள் கேளுமையா சுவாமி தங்களுடைய உத்திரவின் பிறகாரம்
இராத்திரியதினம் மகாஜாக்கிரதையாக ஊர்முழுதும்சுற்றிப்பார்
த்துக்கொண்டு நல்ல நடுராத்திரிவேளையில் தங்கள் அரண்மனை
யை சுற்றிப்பார்த்து வருகிறபோது நடந்த அதிசயமஎதென்றால்
தங்களுடைய குழந்தைகள் இருவரும் அரண்மனையை விட்டு
வெளியில் வந்துநின்று கோரமாகிய ரூபங்களை எடுத்துக்கொண்டு
ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒன்றாக வாயைத்திறந்துக் கொண்டு
ஊருக்குள்பிரவேசித்து ஆடுமாடு முதலான துகளையும் அதா அதம்
செய்துவிட்டு தங்களுடைய அரண்மனைவாயலில் வந்துநின்றஎப்
போதும்போல் குழந்தைவடிவம் எடுத்துக்கொண்டு அரண்மனைக்
குள் சென்றுவிட்டார்கள் இது தான் நாங்களறிவோம் சுவாமி
என்றனர்.

அதனைக்கேட்டுணர்ந்த சந்திரசேகரனென்னும் வேளாளன்
கலகலவென்று நகைத்து தலையாரிகளைப் பார்த்து என்னடா தலை
யாரிகளே இப்போது நீங்கள் சொல்லிய வார்த்தையை யோசித்
தால் என்னமாயிருக்குதென்றால் ஆருமில்லாத ஊரிலே அஸ்வமே
தயாகம் நடந்தாற்போலு மிருக்கின்றது புளிகினாலும் பொருந்த
வல்லவோ புளுகவேணும் அப்படிக்கில்லாமல் பால்குடிக்கின்றசிறு
பாலர்கள் மீது பழியை சுமத்திவிட்டீர்கள் நல்ல தாகட்டும் இன்
றையராத்திரிக்குயான் அறிந்துக்கொள்ளுகிறேன் நீங்கள் அதுப
ரியந்தம் காவலிற்குள் இருக்கவேண்டுமென அப்படியே தலையாரி
களும் சம்மதிக்க அவர்களனைவரையும் சிறைச்சாலையில் அடைக்
கும்படியாக ஆக்யாபித்து அஸ்தமித்தவுடன் சந்திரசேகரன் தன்
னுடைய மனையாளை அழைத்து தலையாரிகள்சொன்ன சமாச்சார
ங்களையெல்லாம் ஆதியோடந்தமாக உரைத்து பின்பு போஜன

முதலானதும் அரிந்திதலையாரிகள் சொன்ன வார்த்தை மெய்யென்றும் பொய்யென்றும் கண்டறியவேணுமென்று தாய் தந்தையர்களிருவரும்பாலர்கள் பக்கத்தில் சயனித்துக்கொண்டு நித்திரைப் போகாமல் பாலர்களைப் பார்த்துக்கொண்டே இருக்தனர்.

அப்படி தாய் தந்தையர்களிருவரும் விழித்தக்கண் சிமிட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறபோது நல்ல நடுராத்திரி வேளையில் பெண்குழந்தையான நீலியானவள் எழுந்திருந்து தன் தமையனாகிய நீலனை தட்டியெழுப்பி என் அண்ணா இப்படி நித்திரை செய்குராய் எனக்கோமெத்தவும் பசியா இருக்கின்றது சீக்கிரம் புறப்படும் ஊருக்குள் பிரவேசித்து ஆடுமாடுகளை பட்சித்துப்பசியாறி வருவோமென்று அண்ணனை எழுப்பிக்கொண்டு அரண்மனைவிட்டு வெளியேவந்து தலையாரிகள் கூறியவண்ணம் அகோரமாகியரூபங்களை எடுத்துக்கொண்டு ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒன்ருக வாயைத் திறந்துக் கெகாண்டு ஊருக்குள் பிரவேசித்து ஆடுமாடுகளை பட்சித்து எப்போதும்போல் குழந்தை உருவாக வந்துப் படுத்துக்கொண்டார்கள் இதுகளை எல்லாம் தாய் தந்தையர்கள் இருவரும் பார்த்து அடடா இதுவென்ன விபரீதமென்று பிர்மித்து புத்திரரென்கிற ஆசையைமறந்து பொழுதுவிடிந்தவுடன் சிறைச்சாலையிலிருக்கும் தலையாரிகளை அழைத்து அவர்களுக்கு வேண்டியவெகுமதிகளுங்கொடுத்து வாருமப்பா தலையாரிமார்களே நீங்கள் சொன்ன வார்த்தையை பொய்யென்று, யோசித்தேன் இராத்திரியதினம் நானும் என்மனைவியும் நேராகவேபார்த்துவிட்டோம் ஆதலால் இந்தப்பாலர்களை இனி வீட்டில் வைத்திருக்கலாகாது இந்தக்ஷணமேநீங்கள் இரண்டுபாலர்களையும் எடுத்துக்கொண்டுபோய் காட்டில் எரிந்துவிட்டு சீக்கிரம்வாருங்களென்று இரண்டு குழந்தைகளையும் தலையாரிகள் கையில்கொண்டு வந்து கொடுத்தனன்.

அப்படியேமகாபாக்கியமென்று தலையாரிகளும் குழந்தைகளை வாங்கிக்கொண்டு திருவாலங்காட்டிற்கு வடக்கே இருக்கும் இருள்சூழ்ந்தகாட்டிற் கொண்டுபோய் ஆலவிருக்ஷத்தின்கீழ் வளர்த்திவிட்டு வந்து சந்திரசேகரனென்னும் வேளாளனுக்கு சங்கதிகளைதெரிவித்து விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடம்போய் சேர்ந்தனர் தாய்தந்தையர்களும் புத்திரன்புத்திரி என்கிற ஆசையைமறந்தார்கள் இங்ஙனம் இவர்களிப்படியிருக்க அடைவில்எரிந்து விட்டுநீலன்நீலி என்னும் இரண்டு குழந்தை

களில் நீலியானவள் எழுந்திருந் ... கோரிவந்தகாரியம் இன்று தான் நிறைவேறிற்றென்றும் மகிழ்ந்து அந்தட்சணமே பூதகணங்களை அழைப்பித்து காடுகளை எல்லாம் சுத்தப்படுத்தி பிறகு எரும்பேருமண்டபம் ஏழுநிலை கோபுரமும் பாம்பேரு மண்டபமும் பத்துநிலை கோபுரமும் கட்டிமுடித்து பூதகணங்கள் புடைசூழ நீலியும் நீலனும் அங்ஙனமிருந்துக்கொண்டு பலவிததான்னியங்களையும் பலவித ஆடையாபரணங்களையும் உற்பத்திச்செய்து வைத்துக்கொண்டு சகலதேசத்தாருங்கேட்டு ஆச்சரியப்படும்படியாக அதிகசரசமாக வித்துக்கொண்டு வந்தார்கள்.

இப்படி இருக்கின்ற காலத்தில் பாம்பு கடித்திறந்துபோன ஆதிசேஷனென்னும் வேதியன் இரண்டாவது பிறப்பு வேளாளனாகப்பிறந்து மூன்றுவதுப் பிறப்பு காஞ்சிபுரத்தில் ஆனந்த செட்டியாரின் மனைவியாளாகிய அம்புஜமென்பவள் வயற்றில் மந்திரவாளோடு மைந்தன் பிறந்தனன் அப்படிப்பிறந்த அருமைப் புதல்வனைப்பார்த்து அன்னை தந்தையர்களிருவரும் அதிக சந்தோஷமுற்று புரோகிதர்களையும் பெரியோர்களையுங் கொண்டு அவர்களால் தினகரனென நாமகரணஞ்செய்வித்து அருமையாக வளர்த்துவந்தனர். ஐந்து வயதானவுடனே பள்ளியில் வைத்து சகலவேதாகமப் புராணங்களையும் வாசித்துக் கொண்டு வருகிற நாளில் தினகரனுக்கோ வயது பதினறுகத் தாய் தகப்பன்மார்கள்கண்டு புத்திரனுக்கு திருமணம் சூட்டிவைக்க வேண்டுமென்று மனதில் எண்ணி உடனே தங்களுடைய மரபில் பெண்ணனங்கை என்னும் ஓர் பெண்ணைத்தேடி மைந்தனுக்கு விவாகத்தைமுடித்து வைத்து சிலநாள்வரையினும் அவர்களிருந்து காலஞ் சென்றனர்.

அப்படியவர்கள் சென்றபிறகு தினகரசெட்டி யென்பவன் தன்னுடைய தகப்பனர் செய்தவர்த்தகத்தை தானேற்றுக்கொண்டு தகப்பனைவிட அதிக சாமார்த்தியமாக செய்துக்கொண்டு வருகிற காலத்தில் ஈஸ்பரனுடைய கிருபாகடாக்ஷத்தினல் அவனுடைய மனைவியாகிய பெண்ணனங்கையின் வயற்றில் ஓர் ஆண் குழந்தைப் பிறந்தனன். அக்குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர் தினகரசெட்டியோ தேசதேசங்களுக்குச் சென்று சரக்குகளை கொள்ளுதலும் அதை இன்னெரு தேசத்திற் கொண்டுபோய் விற்பதுமாக விருக்கின்றபோது திருவாலங்காட்டில் ஆரே ஒரு ஸ்திரிபலவிதமான

தான்னியங்களும் பலவித ஆடையாபரணங்களும் அதிக நயமாக விற்பதைக்கேள்வியுற்று வீட்டிற்கு வந்து தன்மனைவியாகிய பெண்ணனங்கையை அழைத்து வாருமடி பெண்ணனங்கையே காஞ்சிபுறத்திற்கு வடக்கே திருவாலங்காட்டில் ஒரு ஸ்திரீயானவள் காசிக்குக்கலம் நெல்லும் துட்டுக்கொரு சேலையுமாக விற்றுக்கொண்டு வருகின்றாளாம் நம்மோடொத்த வர்த்தகரெல்லாஞ் சென்று வாங்கிக் கொண்டுவந்து வியாபாரஞ் செய்கின்றார்கள். ஆதலால் யானும் திருவாலக் காட்டிற்குப் போகவேண்டும் சீக்கிரம் கட்டுசாதங் கட்டடியென்றனன்.

அப்போதவன் பத்தினியாகிய பெண்ணனங்கை யானவள் கணவனைப்பார்த்து வாருமையா என் பிராணநாதரே உமது தாய் தந்தையர்கள் சொன்னதை மறந்துவிட்டீரோ தெற்கு மேற்கு கிழக்கு இந்த மூன்றுதிக்கிலும் போய் வர்த்தகம் செய்வையேயொழிய வடக்குதிசையை எக்காலத்திலும் நோக்கிப் போகவேண்டாமென்றுச்சொல்லி யிருக்கின்றார்களே அதை நீர் மறந்து எப்படி இப்போது வடக்கு திசையைநோக்கி வர்த்தகத்திற்கு போறேனென்று என்னுடன் புகன்றீர் நமக்கோ அளவற்ற திரவியமிருக்கின்றது அதை வைத்துக்கொண்டே நாம் வெகுகாலம் ஜீவிக்கலாம் ஆதலால் நீர் வடக்கே வர்த்தகமசெய்யப் போகுறேனென்றதை மறந்துவிடும் என்று மனைவியானவள் சொல்லியபோது தினகரசெட்டியானவன் கேட்டு மனையாளைப்பார்த்து அடி பயித்தியக்காரி என்னவார்த்தை சொன்னாயடி பெண்புத்தியைக்கேட்டு புருஷாள் நடப்பார்களோ வருகிறவினை வழியில் தங்குமோ வராததை வருந்தி யழைத்தாலும் வருமோ என்றைக்கு மண்ணின்மேல்பிறந்தமோ அன்றைக்கே சாவது நிட்சயமாகவிருக்க அதையறியாமல் பேசவந்தாய் அன்றியும் என்னுடன் பிறந்த மந்திரவாள் என் கையிலிருக்குமளவும் என்னை தேவர்களாலும் மூவர்களாலும் இன்னு மற்றவர்களாலும் ஜெயிக்க முடியாது அப்படிக்கிருக்க நீயேன் வருத்தப்படுகிறாய் சீக்கிரம் கட்டுசாதங் கட்டடியென்றனன்.

அப்படியே கட்டுசாதங்களை கட்டிவைத்துமருபடியும் கணவனைப்பார்த்துவாருமையா பிராணநாதரே அடியாள் என்சொல்லியுங்கேளாமல் ஒரே பிடிவாதமாகப் போகுறேனென்றபடியால் யான் எப்படி குழந்தையை வைத்துக்கொண்டு ஒண்டியாகவிருப்பேன் யானும் உன்னோடுகூட துணையாக வருகின்றேன்

சுவாமி என்றபோது தினகரன் ... ஏடாகூடமான வார்த்தைகள் பேசுகிருய் எவர்களுக்கடுக்கு ...ர்த்தகம் செய்யப் போகின்றவர் பெண்சாதியையுங்கூட அ...ழைத்துக்கொண்டு போவார்களோ நம்மோடொத்தச் செட்டிமார்கள் நம்மைப்பார்த்து நகைக்கமாட்டார்களா இதோ நான் இன்றைக்குச் சென்று நாளைக்கு வந்து வீடுசேருகின்றேன் நீகுழந்தையை வைத்துக்கொண்டு பத்திரமாகயிருப்பா என அதுகேட்டு பெண்ணனங்கையானவள் கேளுமையா சுவாமி எனக்கு என்மாமி மாமனுர் சொன்ன வாக்கியங்களை யான் ஒருக்காலும் மறக்கமாட்டேன் என்றனள்.

அவ்வார்த்தையைக் கேட்டுணர்ந்த தினகரசெட்டியானவன் பத்தினியைப் பார்த்து வாராயடிப் பெண்ணனங்கையே நீ இப்படி பிடிவாதம்செய்வது ஞாயமல்லவென்று அனேக விதமாகச் சொல்லியும் அவள்கேளாமையினல்கட்டுசாதமூட்டையும் கையிலெடுத்துக்கொண்டு பெண்சாதியையும் அழைத்துக்கொண்டுகாஞ்சிபுறத்தைவிட்டு திருவாலங்காட்டை நோக்கி வருகிறபோது வெய்யற்காலமானதால் நடக்கமுடியாமல் பெண்ணனங்கையானவள் தவிக்கின்றபோது செட்டியானவன் கண்டு மனந்தாளாமல் வருகிறவழியிலிருக்கும் தக்கோலம் பேறம்பாக்கத்தின் ஆற்றங்கரையோறம் ஓங்கி வளர்ந்திருக்கும்படியாய் ஓர் ஆலவிருட்சத்தின்கீழ்வந்து உட்கார்ந்தார்கள் அப்படி உட்கார்ந்துக் கொண்டிருக்கையில் பெண்ணனங்கையானவளுக்கு வெய்யலில் நடந்து வந்த விடாயினுல் நித்திரையானது வந்தபோது தன்னுடையக் கணவன் துடையின்மேல் தலையை வைத்துக்கொண்டு குழந்தையை தன் பக்கத்தில் வளர்த்திக்கொண்டு தன்னை மறந்து நித்திரைப் போய்விட்டனள்.

அப்போது செட்டியானவனுக்கு புத்தியானதுமாறி பெண்சாதிபிள்ளை என்கிறபாஷம் கொஞ்சமேனும்இல்லாமல் என்ன எண்ணுகிருனென்ருல் நாமிவளை யிட்டுக்கொண்டுபோகவே தகாது அப்படிக்கு இட்டுக்கொண்டுப் போவோமென்ருலும் இவள் நம்மோடுகூட நடந்துவரமாட்டாள் ஆதலால் இவளை இங்கையே விட்டுவிட்டுப் போவோமானல் நித்திரைத்தெளிந்து எழுந்துவீடு போய்சேருவாள் என்று தன்மனதை திடப்படுத்திக் கொண்டு அவள் தலைக்கு உயரமாக மண்ணைக் குவித்துவைத்துவிட்டு கட்டு சாதமூட்டையை எடுத்துக்கொண்டு திருவாலங்காட்டை நோக்கி நடந்தான்.

அப்படிசெட்டி[illegible] போனபின்பு நித்திரை செய்துக்கொண்டிருந்த பெண்[illegible]ங்கையானவள்நித்திரைநீங்கிஎழுந்திருந்துபார்க்கின்றபோது [illegible]கணவனையும் கட்டுசாத மூட்டையுங் காணாமையால்மனந்திடுக்கிட்டு குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டுநாலுதிக்குமோடிப்பார்த்தும்காணாமையால் மறுபடியும் ஆலவிருக்ஷத்தின்கீழ்வந்துகுந்திக்கொண்டு சிந்தையானதுகலங்கி செட்டிப்பெண்ணானவள்கண்ணீர்பெருகக் கதரிகதரி அழுது! ஆ தெய்வமேஇப்படியும்விதி யெனக்கென்றலையில் எழுதினாளே என் பிராணநாதரேஎன்னைஇந்தக்கோலம் பேறம்பாக்கத்தின் ஆற்றங்கரையில்அநாதிபட்சியைப் போல்விட்டுவிட்டுப்போகஎன்னமாய் மனந்துணிந்தீரோ இப்படி செய்யவேணுமெனறு எத்தனை நாள் எண்ணங்கொண்டிருந்தீரோ யானறியாமற்போனேனே 'தங்களுக்கு யானொரு குற்றமும் செய்தறியேனே என்மீதுத் தங்களுக்குச் கோபமிருந்த போதிலும் பாலன் முகத்தையும் பாராமல் போனீரே எந்த வழியாகப் போனீரென்று உம்மைத் தேடிக்கொண்டு வருவேன் எனக்கு யாதொன்றும் தோன்ற வில்லையே வந்தவழியுந் தெரியவில்லையே !என்று கோடு கோடென்று குந்தி அழுதுக்கொண்டிருந்தனள்.

## நீலிசெட்டிப்பெண்ணிடம்

### வருதல்.

அப்போது திருவாலங்காட்டில் ஆலயங்கொண்டு எழுந்தருளிஇராநின்ற நீலியானவள் இங்ஙனம் செட்டிப்பெண் தனியாக நின்றுப்புலம்பிக்கொண்டிருப்பதை அறிந்துஅந்தக்ஷணமேதமயனாகிய நீலனை அழைத்து சமாச்சாரங்களைச் சொல்லி பத்திரமாக இருமென்று உத்திரவு செய்துவிட்டு வேளாளஸ்திரீயைப்போல ரூபமெடுத்துக்கொண்டு தக்கோலம் பேறம்பாக்கத்தின் ஆற்றங்கரையில் அழுதுக்கொண்டிருக்கும் செட்டிப்பெண்எதிரேநின்று ஆறம்மா நீ இந்த ஆற்றங்கரை யோரத்தில் அறியாத பாலகனை கையில் வைத்துக்கொண்டு அழுதுப் புலம்பவேண்டிய காரணம் யாது தெரியச் சொல்லுமம்மா என செட்டிப் பெண்ணானவள் வாராயம்மா நான் அழுவதைச்சொன்னால் என்குறையை ஆற்கப்போகின்றையோ என் விதியையான் நினைத்துக்கொண்டு அழுகிறேன் நீ வந்த வழியை நீ பார்த்துக் கொண்டுப் போடியம்மா வென்றனள்.

அதுகேட்டு நீலியானவள் செட்டிப்பெண்ணைப்பார்த்து வாருயம்மா அப்படி உன்னுடையக்குறையை என்னிடம் சொல்வையானால் உடனே அக்குறை யாரும்படியாக செய்குவேன் நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் சொல்லுமம்மாவென்றபோது செட்டிப்பெண்ணானவள் அம்மணியான் என்னென்றுச் சொல்குவேன் என்னை கலியாணம் செய்துக் கொண்ட இன்னாள் வரையினும் என்னைவிட்டு என்கணவன் பிரிந்ததே இல்லை அப்படி இருந்தவர் இப்போதென்னை விட்டுப்பிரிந்து போனதற்குக் காரணம் யாதெனில் காஞ்சிபுறத்திற்கு வடக்கே திருவாலங்காட்டில் யாரோவொரு நம்மைப்போல் ஸ்ரீ ஜாதியானவள் காசிக்குக்கலம் நெல்லும் துட்டுக்கொரு சேலையும் விற்பனைசெய்குகிறாள் அவ்விடம் யான் போய் சரக்குகளை பிடித்துக் கொண்டு வந்து வியாபாரம் செய்யவேண்டும் கட்டுசாதம் கட்டென்று என்கணவன் என்னிடம் சொன்னபோது யான் அவரைப் போகவேண்டாமென்று தடுத்தேன் அதேனென்றால் யான்கலியாணஞ் செய்துகொண்டு மாமிவீடுவந்து வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாளில் ஓர் நாள் தினம் என் மாமியும் மாமனாரும் என்னை அருகில் அழைத்துச் சொன்னதாவது உன் கணவன் வடக்கு திசையை நோக்கிப் போவானாகில் அங்ஙனம் ஒரு ஸ்திரீயாகிய கையில் மாண்டு போவான் ஆதலால் வடக்குதிசை மாத்திரம் அனுப்பவேண்டாமென்று சொல்லியிருந்தனர்.

180295

ஆனபடியால் யான் அவரைப்போக வேண்டாமென்றுத் தடுத்தேன் அவரும் என்மொழியைக் கேளாமல் ஒரே பிடிவாதமாகப் பிறையாணப்பட்டனர் அப்படியானால் யானும் கூடவருகிறேனென்றபோது என்கணவன் என்னை வரவேண்டாமென்று வெகு கடூரமான வார்த்தைகளைச் சொல்லிக் கசரினர் அப்படிக் கசரியும்யான் என் கணவனைப் பார்த்து வாருமையா என்பிராணநாதரே உம்மைவிட்டு நான் அறைநாழியும் பிரிந்திருக்கமாட்டேன் என்றும்பிடிவாதஞ் செய்தபோது என் கணவன் சற்றுநேரம் ஆலோசித்து பிறகு ஏதோ கபடங்களை மனதிலெண்ணிகட்டுசாதமூட்டையையும் எடுத்துக்கொண்டு என்னையும் வாவென்றழைத்தபோது யானும் என் குழந்தையை கையிலெடுத்துக்கொண்டு அவர்பின் தொடர்ந்து வருகையில் யான் வெய்யலில் நடக்கமுடியாமல் பாதைப்படுவதை என் பிராணநாதர்கண்டு மனந்தாளாதவராய் வெய்யல் தாழ்ந்து போகலாமென்று இந்த ஆலமரத்தின்

கிழ்வந்துக் குந்தினோம் எனக்கோ வந்த வெடாயினால் நித்திரையானது வந்தன அப்பே ன் என்குழந்தையை அருகில் வளர்த்திக்கொண்டு என் ஷனுடைய துடையின் மேல் என் தலையை வைத்து அலண்டு நித்திரைப்போய்விட்டேன் அந்தசமயத்தில் என் கணவன் கட்டுசாத மூட்டையை எடுத்துக் கொண்டு தாயும் பிள்ளையுமாக எங்களை இங்கே விட்டுவிட்டு எங்கையோ ஓடிப்போய்விட்டார் யானும் நித்திரை நீங்கி எழுந்து பார்க்கிறபோது கணவனைக் காணாமையால் கலங்கித் தவிக்கின்றேன் இதுதான் எனக்கு நேர்ந்தகுறை அம்மணி என்றனள்.

அதுகேட்டு மாறு ரூபமாக வந்திருக்கும், நீலியானவள் செட்டிப்பெண்ணைப்பார்த்து வாறாய் பெண்ணணங்கே நீஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் இப்போதுன் புருஷனிருக்கும் இடம் நீ போய் சேரும்படியாக நேராகவழிகாட்டுகிறேன் நீயும் உன்பிள்ளையும் போய்சேர்ந்து சுகமாக இருப்பீர் அன்றியும் இன்னமொரு சந்தேகமிருக்கின்றது அதாவது உனக்குக்கலியாணமான விசேஷத்தையும் உன் மாமி மாமனார் பெயரும் உன்பெயரும் உன் பிள்ளையின் பெயரும் உன் புருஷன் பெயரையும் யான் அறியும்படியாக தெரியச் சொல்வையாகில் இதோ நேராகவழிக் காட்டுகிறேனென்றபோது இவ்வார்த்தையை செட்டிப் பெண்ணானவள்கேட்டு மனந்திடுக்கிட்டு மாறுரூபமாக வந்திருச்கின்ற நீலியைப்பார்த்து, வாறாயம்மணி எனக்குக் கலியாணமானவிசேஷங்கள் யாவையும் சொல்ல யாதொரு தடையுமில்லை என்பெயரும் என்பிள்ளை பெயரும் சொல்ல யாதொரு குறையுமில்லை,மாமி மாமனார் பேரும் புருஷன்பேரும் என்னமாய் சொல்கிறது அவர்கள் மூன்றுபேர் பெயரையும் தவிர மற்றவர்களுடையபேரை சொல்லுகின்றேன் நீ என்மேல் கிருபைகூர்ந்து என் புருஷனிடத்திற்குப் போகும்படி வழிகாட்டுவாயம்மாவென்று வருந்திய செட்டிப்பெண் வாய்மொழியைக்கேட்ட நீலியானவள் கொஞ்சமும் இரக்கமில்லாமல் செட்டிப்பெண்ணைப்பார்த்து அடிமாதே யான் உங்களுடைய பெயரையெல்லாம் என்ன காரணத்திற்காகக் கேழ்க்கின்றேனென்றால் உன்னுடையவார்த்தை மெய்யென்றும் பொய்யென்றும் இதில் எனக்குத் தெரியும் அதன்பிறகு உனக்குநேராக வழிகாட்டலாமென்று யோசிக்கின்றேன் ஆதலால் நீ சீக்கிரம்சொன்னால் சொல் அப்படிசொல்லாவிடில்இதோ நான்போகின்றேனென்று கூறினள்.

அப்போதுச் செட்டிப்பெண்ணானவள் அழுதகண்ணும் சிந்தையுமாக அம்மணி என்று அவள்பாதத்தில் விழுந்து தாயே என்னைக்கொண்ட புருஷன் பெயரைச் சொல்லக் குலைகள் நடுங்குதே அங்கம் பதருதே எப்படி மனந்துணிந்துச் சொல்வேன், கொண்டவன் பெயரைச்சொன்னால்கொடியநரகம் வாய்க்குமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்களே புருஷன் பெயரைத் தவிர மற்றவர்கள் பெயரை உன்மனம்போல் சொல்லுகின்றேன் தாயே என அதுகேட்டு நீலியானவள், வாராய் மாதே பெயரை வாய்விட்டு வெளியேசொன்னால் பாபமென்றாயே அந்த பெயர் நெஞ்சில் இல்லையோ அடிபயித்தியக்காரி வாய்விட்டுச் சொல்லி விட்டால் பாபம் இல்லையென்றும் அப்படிச் சொல்லாமல் நெஞ்சில் நினைத்திருப்பவர்களுக்கு உடனே பாபம் சம்பவிக்குமென்றும் மேலோர் கூறியதை நீ அறிந்ததில்லையோ போடிபோ பயித்தியக்காரி இந்த அத்தவானவெளியில் கொண்டுவந்து தாயும்பிள்ளையுமாக விட்டுவிட்டு ஓடிப்போனவன் பெயரைச்சொல்ல யோசித்து யோசித்து ஓலமிட்டால் உன் புருஷனிடம் நீபோய் சேருவதெப்படி சொல்லடி சீக்கிரம் என அப்போது செட்டிப்பெண்ணும் ஆலோசித்து நாம் சொல்லாவிடில் நமக்கிவள் வழிகாட்டமாட்டாள் புருஷனைப்போய் காணமாட்டோம், வருகின்றபாவம் வருகட்டும் சொல்லி துலைப்போமென்று மனந்துணிந்து தனக்கு விவாகமாகிறபோது அங்கு வந்திருந்த பந்துமித்திரர் முதலானவர்களுடன் வேதியர்களும் நடத்திய கலியாணசடங்குகள்யாவையும் ஆதியோடந்தமாக உரைத்து வருகிறபோது நீலியுங்கேட்டு செட்டிப்பெண்ணைப்பார்த்து வாராயமாதே கலியாண விசேஷங்கள் கூறியதுபோதும் உன் புருஷன் முதலானபெயரைக் கூறுவாய்மாதே என அப்படியே நல்லதென்று செட்டிப்பெண்ணும் கேளுமம்மாதாயே என்பெயர் பெண்ணனங்கை என்பிள்ளைபெயர் சந்திரசேகரன் என் மாமிபெயர் அம்புஜம்மாள், என்மாமனார்பெயர் ஆனந்தசெட்டியார் என்புருஷன்பெயர் தினகர செட்டியார் என்று கூறினள்.

# நீலிசெட்டிப்பெண்ணை

## காஞ்சிபுரம் போகும்படியாக வழிகாட்டி விட்டு செட்டியிடம் வருதல்.

அவ்வாறு கூறியப் பெயர்களை எல்லாம் நீலியானவள் கேட்டு சந்தோஷமாகிசெட்டிப்பெண்ணைப்பார்த்து வாறாய் பெண்ணனங்கையே இதோ பார்த்தாயா இந்தவழியே நேராகச்செல்வாயாகில் உன் புருஷனிருக்குமிடம் கொண்டுபோய்விடும் நீயும் உன் புருஷனைக்கண்டு சந்தோஷமடைவாய் என்றுக்காஞ்சிபுரத்திற்கு போய் சேரும்படியாக வழிகாட்டியபோது செட்டிப்பெண்ணும் நீலிஇடத்தில் செலவு யெற்றுக்கொண்டு காஞ்சிபுறம்போய்ச்சேர்ந்து தன் மனையிற் புகுந்து புருஷனைக்காணமையால் தனது பந்து மித்திரர்களிடம் சொல்லி தன் குறைகளை யாற்றிக்கொண்டு அல்லும் பகலும் அறுபது நாழிகையும் கணவனுடைய வரவைஎதிர்பார்த்துக்கொண்டிருந்தனள் அவளப்படியிருக்க இங்ஙனம் நீலியான வள்செட்டியைத்தேடிவருகிறவள் என்ன ஆலோசிக்கிறாள் எனில் நாம் இப்போது அந்த செட்டியின் பெண்சாதியைப்போல் ரூபம் எடுத்துக்கொண்டு போய்அவனை மருத்துக்கொள்வோமென்றாலோ நமது கையில் குழந்தை யில்லையே இதற்கென்னசெய்வோமென்று எண்ணாதும்எண்ணி சற்றுநேரம் ஆலோசித்து பிறகு தனது தமையனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவை மத்தில் நினைத்து ஸ்தோத்திரம் செய்தனள் அப்போது கபட நாடக சூஸ்திராவ தரியாகிய மகாவிஷ்ணுவானவர் கருடவாகன ரூடராய் வைகுந்தத்தை விட்டு நீலியின் முன்வந்து தோன்றியபோது நீலியானவள் கண்டு ஸாஸ்டாங்கமாக தண்டம் சமர்ப்பித்து எழுந்து எதிரில் நிற்க மகாவிஷ்ணுவானவர் பார்த்து வாருமம்மா நீலியே இப்போது நீஎன்னை நினைத்தகாரியம் யாது அதனை ஆதியோடந்தமாக யானறியும்படி தெரியச் சொல்குவாய் அம்மா வென்றனர்.

அப்போது நீலியானவள் அண்ணனை [illegible]ாத்திரஞ் செய்து வாருமண்ணா நான் கோரிய காரியம் யாவும் தங்களுடைய கிருபாகடாக்ஷத்தினால் நிறைவேறினது இன்னம் முக்கியமான காரியம் ஒன்றிருக்கின்றது அதாவது நான்பழுக்குப் பழிவாங்கவந்த

அச்செட்டியின்பெண்சாதிபோலவேடம் பூண்டுபோய் அவனைக் கொல்வோமென்றால் அவன் பெண்சாதிக்கையில் ஒரு ஆண்குழந்தை யிருக்கின்றது அதுபோல்என்கையிலும்இருந்தாலல்லவோ அவன்பெண்சாதியைப்போல் ரூபமெடுத்துப்போய் மடக்கலாம் என் செய்வேன் என் சபதம் வீணாகின்றதே அண்ணாவென்று அழுதுப்புலம்புகிறபோது ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் மனது கூர்ந்து வாருயம்மா தங்கையே நீ இதற்காக விசனப்படவேண்டாம் ஆதியில் அந்தப்பெண் தமையன் திருமூர்த்திகளோடு தேவர் முதலானவர்களுடன் ஆகாயவாணி பூமிதேவி இவர்களை சாட்சியாகவைத்து தன் தங்கையின் வயற்றிலிருந்த கருவை கையிலெடுத்து கள்ளிச்செடியின்மீது போட்டு இப்பழியை யாரொருவர் வந்து யேற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் கள்ளியைக்கிள்ளினால் பிள்ளையாகவும் கருவேலங்காயை அருத்துக்கட்டினால் சிலங்கையாகவும் ஆகவேணுமென்றுச் சொல்லி இருக்கின்றமையால் அம்மொழிதப்பாது ஆதலால் நீ இந்தக்ஷணமே அவ்வாறுசெய்து குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் செட்டியை மருத்து உன் பழியைத்தீர்த்துக்கொள்வாயென்று ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் கூற அம்மொழியைக்கேட்டுணர்ந்த நீலியும் ஆனந்த சந்தோஷமாகி அண்ணனை மிகவும் கொண்டாடி நின்றனள் அப்போது மகாவிஷ்ணுவும் தங்கையிடத்தில் விடை பெற்றுக்கொண்டு வைகுந்தம் போய்ச்சேர்ந்தனர்

அதன் பின்பு நீலியானவள் மகா விஷ்ணு கூறிய வண்ணம் அந்தக்ஷமே கள்ளிச்செடியின் அறுகிற் சென்றுக் கள்ளிச்செடியைக்கிள்ள பிள்ளையாயின கருவேலன்காயை அருத்துக்கட்ட சிலங்கையாயினகண்டு களிகூர்ந்து இனி நம்முடையகோரிக்கை ஈடேறிற்றென்று உடனே செட்டிப் பெண்போல் ரூபம் எடுத்துக்கொண்டுவர செட்டியானவன் அங்குள்ளஓர் தாமரைத்தடாகத்தின் கரையில் குந்திக்கொண்டிருந்தனன். அப்போது நீலியான செட்டிப்பெண் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு செட்டியின் முன்னேவந்து நின்று வாருமையா செட்டியாசீர யானென்னக் கொடுமை செய்தேன் என்னதுரோகம் பண்ணினேன் என்னவஞ்சகஞ்செயதேன் என்பேரிலுமக்கு என்னகோபம்இப்படி என்பேரில்தான் யேதோகோப மிருந்தபோதினும் உன்பிள்ளையின்மீது என்னகோபமோ அறியேன் அப்படி என்னகோப மிருந்தபோதினும் என்னையும் என். பிள்ளையையும் அத்துவான

மான காட்டுவழியில் விட்டுவிட்டு என்னமாய் மனந்துணிந்து வந்திரோ உன் மனம் என்ன கல்லோ பாறையோ இரும்போ இருவருக்கும் கட்டிய கட்டுச்சாதத்தையும் எடுத்துக்கொண்டோடி வந்தீரே பிராணநாதா என்றுப் பலவாறாகக் கூறியபோது செட்டியானவன்கேட்டு திடுக்கிட்டு ஒன்றும்சொல்ல வாய்வாராமல் சற்றுநேரம் சும்மாவிருந்து தன் மனதில் என்ன ஆலோசிக்கிறானெனில் நமது எண்ணம் சரிவராமல் போயிற்று இனியாதொரு ஆலோசனையும் செய்வதில் பிரயோசனமில்லை என்றுதன்மனதை தானே தேற்றிக்கொண்டனன்,

அப்படித் தேற்றிக்கொண்ட செட்டியானவன் தன்மனைவியாகிய செட்டிப்பெண்ணைப்பார்த்து வாராய்மாதே நான் உன்னை கபடவஞ்சனையாக விட்டுவந்தவனல்ல நி என்னுடன் இந்தக்காட்டுவழியில நடந்து வரமாட்டாய் என்றும் நி நடக்கும் பரிதாபத்துடன் குழந்தை வெய்யலில் வாடி வதங்கிக் களைத்துப்போகுமென்று என்மனதில்எண்ணி தக்கோலம்பேறம்பாக்கத்தின் ஆற்றங்கரையில் விட்டுவிட்டு வந்தேன் அப்படியே வீடுபோய்ச் சேர்வாயென்று ஆலோசித்தேன் அப்படி நிபோய் சேராமலும்உனக்கும் உன் பிள்ளைக்கும் ஓர் இடையூறு மில்லாமலு ம்தெய்வ சகாயத்தினால் என்னிடம்வந்துசேர்ந்தாய் இனி யாதொரு சந்தேகமும் வைக்கவேண்டாம் கட்டுசாத மூட்டையிந்தா இங்குதானே பத்திரமாககுந்திக்கொண்டு இரும நான் இந்த தடாகத்தில் இறங்கி ஸ்தானஞ் செய்து வருகிறேன் என்றனன் அப்போது நிலியாகிய செட்டிப்பெண் செட்டியைப்பார்த்து வாருமையா பிராணநாதா தக்கோலம் பேறம்பாக்கத்தில் ஆற்றங்கறையில் விட்டுவிட்டு ஓடிவந்தீரே இன்னம் எங்கேயோடிப்போக எண்ணங்கொண்டீரோ அறியேன் என்று எழுந்து செட்டியின்மடியைப்பிடித்துக்கொள்ள செட்டியும் பெணசாதிக்குப் பிறியவசனங்களைச் சொல்லி நம்பிக்கைசெய்தபோது மடியைவிட்டனள்பிறகு செட்டியானவன் தாமரைத்தடாகத்தில் இறங்கி ஸ்தானபானங்கள் செய்து பூசைமுதலானதும் முடித்துக்கொண்டு கரையேறிவந்து பெண்சாதியைப்பார்த்து வாராய் மாதே கட்டுச்சாதமூட்டையை அவிழ்த்து எனக்கும் சாதமிட்டு நியும் பொசிப்பாய்என்றபோது நிலியாகிய செட்டிப்பெண் கணவனைப்பார்த்து வாருமையா பிராணநாதா நிர் மாத்திரம் ஸ்தானபானம் பண்ணிவந்தீரே, யான்

செய்யவேண்டிய தில்லையோ ஸ்தானம் செய்யாமல் எப்படி உமக்குச் சாதம் பரிமாறுவேன் தேவரீரிந்த குழந்தையை சற்றுநேரம் பிடியும் நான் ஸ்தானம்செய்து வருகிறேனென்றனள்.

அவ்வாறே செட்டியும் சம்மதித்து குழந்தையைத் தன்கையில் வாங்கிகொண்டு மனையாளை ஸ்தானம்செய்து வரும்படியாக ஆக்யாபித்தனன் அப்படியே நீலியாகிய செட்டிப்பெண்ணும் தாமரை தடாகத்தில் இறங்கி ஸ்தானம் செய்கிறவள்போல் ஒரு மந்திரத்தை உச்சரித்தனள் அப்போது செட்டிக் கையிலிருந்தக் குழந்தையானது ஜிவ்வென்றுக்கிளம்பி செட்டியின் நெஞ்சைப் பிடித்து அழுத்த யெட்டிக்கு கண்விழிப்பிதுங்கியபோது ஆவென்று அலறி குழந்தையை கீழேபோட்டுவிட்டு மந்திரவாளைகையிலெடுத்து பார்க்கின்றபோது செட்டிக்கு பூர்வஙியானமானது பிறந்தன அப்போதென்னதோன்றுகின்றதெனில் அடடாஇவள் உன்பெண்சாதியல்ல உன்னைக் கொல்லவந்த நிலி இவள் உன்பெண்சாதியைப்போல் ரூபமெடுத்துக்கொண்டு வந்திருக்கின்றாள் அது உன்பிள்ளையல்ல மாய்மாய் உண்டாக்கியபிள்ளை இவளை ஒருக்காலும் நம்பவேண்டாம் என்று நினைவு உண்டாகியபின் உடனே பூர்வஙியானம், போய்விட்டன. பிறகு செட்டியானவன் அதிககோபத்தொடு இரண்டுகண்ணும் கோவப்பழம்போ சிவக்க மீசை படபடவென்றுத்துடிக்க பல்லை நரநரவென்றுக்கடித்து மந்திரவாளைக் கையில்பிடித்து கரகரவென்று கழட்டிக்கொண்டு மாருரூபங்கொண்டிருக்கும் நிலியை வெட்டப்போகையில் நிலியானவள் மந்திரவாளுக்குப் பயந்து குழந்தையை கையில் எடுத்துக்கொண்டு செட்டி கண்ணுக்குத் தோற்றுமற்படி மாயமாக மறைந்திருந்தாள்.

அப்போது செட்டியானவன் நாலுதிக்கும் திரும்பிபார்த்து பெண்சாதியைப்போல் வந்தவளைக்காணமையால் என்ன ஆலோசிக்கிறறெனில், நாம் நம்முடைய மனையாளின் பேச்சைக்கேளாமல் வந்தமையால் இப்பேர்க்கொத்த அபாயம் நடுவழிலேயே வந்துவாய்ந்தன இன்னம் என்னென இடருகள்வந்துசம்பவிக்குமோ அறியேன், ஆயினும் பெரிதல்ல பரமேஸ்வரனுடைய கிருபாகடாட்சத்தினல் நமது கையில் மந்திரவாள் இருக்குமட்டும் நமக்குயாதொரு பயமுமில்லை என்று மனந்துணிந்து, பின்வைத்தக்காலை பின்வைக்கலாகாதென்று, மந்திரவாளை மடியிற், சொரு

கிக்கொண்டு வடக்குமுகமாக திருவாலங்காட்டுநோக்கி, கொஞ்ச தூரம் போகிறபோது மாயமாய் மறைந்த நீலியானவள் மறுபடியும் செட்டிப்பெண்ணைப்போல் ரூபமெடுத்துக்கொண்டு குழந்தையைக் கரத்திலேந்தி செட்டிக்கு முன்னைகப்போய் செட்டியை மருத்து சொல்லுகிறுன். வாருமையா செட்டியாரே, என்னை அருமையாகத்தேடி மணம்புரிந்தீர். காஞ்சிமா நகரிலுள்ள யாவரும் புகழும்படியாக, உமக்குபணிவிடைசெய்துக்கொண்டுஉமது வார்த்தைக்கு பதில்வார்த்தை சொல்லாமல் இருந்தும், அடியாளும் உம்மைப்போல் ஒரு புத்திரனையையும் பெற்றேன், அன்றியும், தாய்தந்தைதெய்வம் முதலானதும், கணவனைவிட வேறேயில்லை என்று முன்னேர்கள் கூறிய வண்ணம் அதை யான் கிஞ்சிற்றும் கடவாமல் நம்பி இருந்த என்னை தாயும் பிள்ளையுமாக அழைத்துக்கொண்டுவந்து தக்கோலம் பேறம்பாத்தின் ஆற்றங்கரையோரத்தில் நித்திரைபோகிற சமையத்தில் விட்டுவிட்டோடிவந்தீர் பின்பு யான் நித்திரைத் தெளிந்தெழுந்து உம்மைப்பார்த்தபேகது நீர் காணமையால் யான் அவ்விடத்தில் நின்றுக்கோடுகோடென்று குந்தி அழுகிறபோது, ஆரோவொரு புண்ணியவதி என்னுடம்வந்து என்னுடைய வாலார் முழுதுங்கேட்டாள் யானும் ஆதியோடந்தமாகச் சொன்னேன் அதன்பின்பு அந்த அம்மாள் மனமிறங்கி உம்மை கண்டுபிடிக்கும்படியாகவழிகாட்டினுள் நான் அதே மார்க்கமாக குழந்தையை எடுத்துக்கொண்டு வந்தேன் தேவரீர் உம்மையும் இங்கேகண்டேன் என் களையாறினேன் என்மீது உள்ளகோபம் பொருத்தாட்கொள்வீர் ! பிராணநாதா என்று கபடமாகப்பேசி எதிரில் நின்றனள்.

அவளை செட்டியானவன் பார்த்து அடி சண்டாளி இந்தக் காட்டில் வாழ்கின்ற காட்டேறியோ பிரம ராட்சதையோ பூதமோ பிரேதமோ பொல்லாதக் கொடிய நீலியோ அடி பாதகி தாமரைதடாகத்தின் அருகேவந்து இம்மாதிரியாகவே பொய்வார்த்தைகளைப்பேசி அடிபூதகி பூதத்தைக் கொண்டுவந்து குழந்தையென்று என்கையில் கொடுத்து என்னைக் கொல்லும்படியாகநினைத்தாய் யானும் என்னுடைய மந்திரவாளின் பலத்தினல் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டேன் அடி துரோகி மருபடியும் என்னை வந்து மடக்குறுய் குறியாய் ஓடிப்போனலாச்சுது இல்லாவிட்டால் என்னுடைய மந்திரவாளுக்கு பலிகொடுப்பேன் என்று செட்டியானவன் சீறி வைதபோது மாறுவேடம்பூண்ட நீலியான

செட்டிப்பெண்ணானவள் கண்ணீர்விட்டுக்கதறி அழுது செட்டியைப்பார்த்து வாருமையாசெட்டியாரே நான் எந்த தாமரை தடாகத்தை அறிவேன் யானெப்போ உன்கையில் குழந்தையைக் கொடுத்தேன் இதென்ன ஆச்சர்யமாய் வார்த்தைகள் சொல்லுகிறீர் இது என்னபாவமா, யான் உம்மை தக்கோலம் பேறம்பாத்தின் ஆற்றங்கரையிலுள்ள ஆலமரத்தண்டை பார்த்த உன் திருமுகத்தை இப்போதிங்கு பார்த்தேன், யான் உன்னைக்கொல்ல நினைப்பவளானால் உம்மை வடக்குநோக்கிப் போகவேண்டாமென்று தடுப்பானேன். உம்மை ஒண்டியாக அனுப்பப் போகாதென்று யானும் உம்முடன் வரவேண்டியதென்ன இதை சற்றும் ஆலோசியாமல் பேசுகின்றீர், எந்த பாதகியாகியப்படுநீலி உம்மை வழிமருத்துக்கொல்ல நினைத்தாளே அப்பவே என் மாமிமாமனார் சொன்னபடி வடக்கே நோக்கிப் போகக்கூடாதென்று யான் உம்மை தடுத்தேன் நீர் என்மொழியைக் கேளாமல் வந்தீர் அப்படி வந்ததற்கு நடுவழியிலேயேதானே ஒரு ஸ்திரீயினால் இடர்வந்தெனச்சொல்லுகிறீர் ஆனபடியால் இன்னம் வடக்கே நோக்கிப் போவோமானால் இன்னம் என்னென்ன இடர்வருமோ பிராணநாதா இப்படியே வாரும் நமது காஞ்சிமாநகரை போய்ச்சேர்ந்து சுகமாக விருக்கலாம் வாருமையாசெட்டியாரே யென்றுக் கபடமான வார்த்தைகள் பேசி வருந்தியழைத்தனள்.

அப்போது செட்டியானவனுக்கு மதியானது மயங்கி இவள் நம்முடையமனையாள்தானென்று நிட்சயித்து அவளைப்பார்த்து வாருயடிமாதே. சகலருமறிய நான்வர்த்தகத்திற்கு வந்து என்னோடொத்தச் செட்டிகளெல்லாம் எனக்கு முன்போயிருக்க நான் இப்படியே திரும்பிப்போவோமானால், அனைவரும் நகைப்பார்கள் என்ன இடர் வந்தபோதிலும் திருவாலங்காட்டுக்குப் போகாமால் திரும்பமாட்டேன் என்னிடத்தில் மந்திரவாள் இருக்குமளவும் எனக்கு யாதொரு பயமும் இல்லை. இப்படியென்று செட்டியும் மாறுரூபங்கொண்டு வந்திருக்கும் நீலியும் பேசிக்கொண்டே போகிறபோது செட்டிப் பெண்ணாகிய நீலி செட்டியைப்பார்த்து வாருமையா செட்டியாரே அந்தக்குழந்தையைச் சற்றுப்பிடியும், நான் சின்ன சலபா தைக்குப்போய் வருகிறேனென, அப்போது செட்டியானவன், முன்புபட்ட ஒருபயத்தினால். அச்சமுடையவனாகவே குழந்தையைக் கையில்வாங்கிக்கொண்டு முத்தங்கொடுத்து கொஞ்சிவிளையாடிக் கொண்டிருந்தனன்.

அப்போது நீலியானவள் அங்குள்ள ஓர் செடிமறவாகச் சென்று முன்போல் ஒருமந்திரத்தை உச்சரித்தபோது சிறுகுழந்தையானது சீறி பிரம ராட்சதன்போல் எழும்பி செட்டியைக்கொல்ல எத்தனிக்கிறபோது. செட்டியானவன் திடுக்கிட்டு கையும் காலும் உதரவிட்டுக்கொண்டு கீழேவிழுந்துப் புரண்டு எழுந்து அடடா முன்னொருதரம் மோசம்போயி இருந்தும் மறுபடியும் மோசம் போனேனே என்று மனம்துடித்து மந்திரவாளை கையிலுருவிக் கொண்டு ஓடினன்.

அதுகண்டு செடிமறவாகப் போயிருந்த நீலியானவள் அகோரமாகிய ரூபங்களை எடுத்துக்கொண்டு பேறிடிமுழக்கம்போல் கர்ஜ்ஜித்து செட்டியின் எதிரேவந்து ஆவென்று வாயைத்திறந்து முழங்க வருகிறபோது மந்திரவாளினுடைய பலத்தினல் மந்திரவாளைக் கையிலுருவிக்கொண்டு போகையிலே நீலியானவளுக்கு மந்திரவாளுடைய மகிமையினல் செட்டியின் அருகிற் செல்லமுடியாமல் அனேகவிதமாகிய ரூபங்களை எடுத்தெடுத்து, செட்டியைவந்து மிறட்டியபோது, செட்டியானவன் குடல்நடுங்கி பயந்து ஓட்டமாக ஓடியபோது அங்கனே திருவாலங்காட்டில் வாசம்செய்யும்படியான வேளாளர்கள் எழுபதுபேரும் கூட்டமாகக் கூடி குந்திக்கொண்டு அவர்கள் ஏதோ ஒரு ஞாயங்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

# செட்டி வேளாளரிடம்
## போய் முறையிடுதல்.

அப்போது செட்டி அலறி அழுதுகொண்டு ஓடி எழுபது பேர் வேளாளர்கள் கூட்டமாகக் கூடியிருக்கும் சபைமுன்னே போய் அழுதகண்ணும் சிந்தையுமாக நின்றபோது வேளாளர் செட்டியைப்பார்த்து உட்காரும்படியாகச்செய்து பிறகுவாருமையா செட்டியாரே நீர் எந்த ஊர் உன் பெயரென்ன நீ இங்குவந்த காரணம்யாது அதையாவும் யாங்கள் அனைவரும் அறியும்படியாக ஆதியோடந்தமாகச்சொல்ல வேண்டுமென்றபோது, செட்டி வாருமையா வேளாளமார்களே, யான் இருப்பது காஞ்சிபுரம் என்பெயர் தினகரசெட்டியார் என் தந்தைபேர் ஆனந்தசெட்டியார் என் தாயார்பேர் அம்புஜம்மாள் என் பெண்சாதிபேர் பெண்ணனங்கை எனக்கு விவாகமான ஐந்து வருடத்திற்கெல்லாம்

என்னுடைய தாய்தந்தையர் இருவரும் இறந்துபோனுர்கள்பிறகு யானும் என்மனைவியும் வாழ்ந்துக்கொண்டு வருகிறநாளில் ஈஸ்பரனுடைய கிருபாகடாக்ஷத்தினுல் எங்களுக்கோர் புத்திரன் பிறந்தன அப்படி இருக்கிறபோது திருவாலங்காட்டில் யாரோவொரு ஸ்திரீயானவள் காசிக்குக் கலநெல்லும் துட்டுக்கொரு சேலையுமாக விற்கின்றதாய் கேள்விப்பட்டு யான் என்பெண்சாதியை அழைத்து இந்தசங்கதிகளைச்சொல்லி கட்டுச்சாதங் கட்டடியென்றேன் அதுகேட்டு அவள் என்னை வடக்குதிசைநோக்கி வியாபாரத்திற்குப் போகவேண்டாம் என்று தடுத்து அப்போதவள் கூறியதுயாதெனில் வாருமையா பிராணநாதரே உமது தாய் தந்தையாகிய எனது மாமி மாமனுர் சொன்னதாவது கிழக்கு தெற்கு மேற்கு இந்த மூன்று திக்கும் சென்று வர்த்தகம்செய்து வரட்டும், வடக்குதிக்குமாத்திரம் உன் புருஷனை போகவொட்டாதே யென்று சொல்லினுர்கள் அதேதெனெனில் அப்படி வடக்குதிசை போனுல் ஒரு ஸ்திரீஜாதிக்கையில் மாண்டுபோவா என்றனர்! என்று இவ்வாறுக்கூறி எனைத்தடுத்தனள் யானும் அவள் மொழியைக் கேளாமல் ஒரே பிடிவாதமாகப் பிறையாணப்பட்டபோது. அவளும் என்னுடன் கூட வருவேனென்று பிடிவாதம் செய்தனள் அப்படியே யானும் அவளை தாயும்பிள்ளையுமாக அழைத்துக்கொண்டு வருகிறபோது அவள் வெய்யலில் நடக்க மாட்டாமல் களைத்துப் போவதையான் கண்டு மனம் தாளாதவனுய் தக்கோலம் பேறம்பாக்கத்தின் ஆற்றங்கரையோரத்தில் இருக்கும் ஆலமரத்தின் கிழ்வந்து குந்தியபோது அவளுங்கு நடந்துவந்த அலுப்பினுல் நித்திரைபோய்விட்டனள் அப்போது யான் என்ன யோசித்தேனெனில் இவள் நம்முடன்கூட நடந்து வரமாட்டாள் இங்ஙனே விட்டுப்போவோமாகில் நித்திரைதெளிந்து எழுந்து காஞ்சி புறம்போய் சேர்வாளென்று விட்டுவிட்டுயான் தனியாக வருகிறவழியில் யாரோவொரு ஸ்திரீயானவள் ஒரு குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டுவந்து என்னை மடக்கி அகோரரூபங்களைக்காட்டி ஆவென வாயைத்திறந்து முழுங்க வந்தனள் அது கண்டு யானும் பயந்து உம்மிடம் ஓடிவந்தேன் என்பயத்தை தீர்த்து காப்பாற்றுவது உங்களுடையக்கடமைஎன்றபோது எழுபதுபேர் வேளாளர்களும் கேட்டு செட்டியைத் தேற்றி தங்களிடத்திலேயே வைத்துக்கொண்டு பிறகு தங்களுடைய ஞாயங்களைப் பேசிக்கொண்டார்கள்.

# நீலி செட்டியின் பெண்சாதி

## போல் ரூபமெடுத்துக்கொண்டு

## வேளாளர்களிடம் வருதல்.

அப்படியிருக்கிறபோது நீலியானவள் என்ன ஆலோசிக்கிறாளெனில் எவ்விதமான தந்திர சூதுகள் செய்தும் செட்டியானவன் மந்திரவாளினுடைய பலத்தினால் நம்மை ஏமாற்றிவிட்டு ஓடிப்போனான் அவன் எங்கேபோனாலும் அவனை விட்டுப் போகிறதில்லை நல்லதாகட்டும் நமதுஎண்ணத்தின்படியே ஒரு பழிக்கு எழுபத்தோர்பழி வாங்கஎழுபதுபேர் வேளாளரும் கூட்டமாக இருக்கின்றார்இது நல்லசமயமென்று மனதில் எண்ணி அந்தட்சணமே செட்டியின் பெண்சாதியைப் போல் ரூபமெடுத்துக் கொண்டு கையில் குழந்தையை யேந்தி அன்னம்போல் அசைந்து மெதுவாகநடந்து அழுதகண்ணும் சிந்தையுமாகப் புலம்பிக்கொண்டு கூட்டமாகக்குந்தியிருக்கும் வேளாளர்கள் முன்போய் நின்று என் புருஷனைப்பார்த்தீர்களா வென்று புலம்பிய போது வேளாளர்கள் செட்டிப்பெண்ணைப் பார்த்து வாருமம்மா மாதே நீயார் உன்பெயரென்ன ஊரெங்கே இப்போது சிறு குழந்தைக் கையிலெடுத்துக்கொண்டு அழுதகண்ணும் சிந்தையுமாக இங்கு வந்த காரியம்என்ன அதைநாங்கள்யாவரும் அறியும்படியாகத் தெரியச்சொல்லுமம்மா வென்றனர்.

அப்போது நீலியாகியசெட்டிப்பெண் வேளாளர்களைப்பார்த்து என்ன சொல்லுகிறாளென்றால் கேளுமையா தகப்பன் மார்களே தமையன்மார்களே யாங்களிருப்பது காஞ்சிபுரம் என் புருஷனார் என்னை இட்டுக்கொண்டுவந்து தாயும்பிள்ளையுமாகஎங்களை தவிக்கவிட்டு ஓடிவந்து விட்டார் அவரைத்தேடிக்காணமல் அலைகிறேன் அண்ணமார்களே என்று அழுகிறபோது வேளாளர்கள் பார்த்து செட்டிப்பெண்ணிற்கு தயிரியஞ்சொல்லி பிறகு அங்ஙனம் இவளுக்கு முன்வந்து முறையமிட்டுக் கொண்டசெட்டியை அழைத்து வாருமையாசெட்டியாரே நீர்இப்படியும் செய்யலாமா பெண்சாதியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டுவந்து தக்கோலம் பேறம்பாக்கத்தின் ஆற்றங்கரையோரத்தில் விட்டுவிட்டுஓடிவரலாமா அதோபாரும் உன்பெண்சாதியும் பிள்ளையும் வந்திருக்கின்றார்கள்பாருமென்றனர் அம்மொழியைக்கேட்டுணர்

ந்த செட்டியானவன் வேளாளர்களைப் பார்த்துகேளுமையா வே ளாளமார்களே அவள்மொழியை ஒருக்காலும் நம்பாதீர்கள் நான்வர்த்தகம் செய்யும்படியாக வந்தவன் என் வீட்டு விட்டுவரு கிறேன் இது ஆச்சரியமான வார்த்தையாகஇருக்கின்றது அவள் பேச்சை கொஞ்சமும் நம்பவேண்டாம் இவள்தான் என்னை வழி மடக்கி பட்சிக்கும்படியாக வந்தவள் தாங்கள் யாவரும் ஆலோசி த்து அவளை அழைத்து உன்கணவன் உன்னையேன் அழைத்துவ ந்தாரென்று கேட்பீராகில் அப்போது அவள் திருட்டு வார்த்தை தங்களுக்கு நன்ருய் தெரியவருமென்றனன்.

அம்மொழியைக் கேட்டுணர்ந்த வேளாளமார். அனைவரும் அந்தட்சணமேநீலியாகிய செட்டிப்பெண்ணை அழைத்துகேளாய் மாதே இவர்தானு உன்புருஷனென்றுக் கேட்க செட்டிப்பெண் ணுகிய நீலி அங்குள்ளவர் மனம் உருகும்பயடியாக ஆவென்று அலறி ஐயா இவர் தான் என் புருஷன் என்றனள் அப்போது வேளாளமார்கள் அனைவரும் செட்டிப்பெண்ணைப் பார்த்து வா ருய்மாதே வர்த்தகம் செய்ய வந்த உன் புருஷன் உன்னையேன் கூடஅழைத்துக்கொண்டு வந்தார்அல்லது நீயாகவந்தாயா அதை அறியும்படு தெரியச்சொல்வாயானுல் உன் மொழிமெய்யென்று நம்புவோமென்றனர் அப்போது நீலியாகிய செட்டிப்பெண் வே ள்ளாளர்களைப்பார்த்து கேளுமையா தகப்பன்மார்களே தமையன் மார்களே என் புருஷனேடு கூடவந்தது யேனென்ருல் என் மாமிமாமனுர் காலஞ்செல்லாததற்கு முன்னமே என்னிடம் சொ ல்லிவைத்ததென்னவென்ருல் கிழக்கு தெற்கு மேற்கு? இந்தமூ ன்று திக்கினும் என்புருஷன் வர்த்தகம் செய்துவரட்டும் வடக்கு திக்குமாத்திரம் போகவேண்டாமென்று தடுப்பாய் என்றபோது யான் என் மாமி மாமனுரைப்பார்த்து என்வடக்குதிக்குப்போக க்கூடாதென்று தடுத்துக்கேட்டேன் அப்போதவர்கள் கூறியது யாதெனில அப்படி வடக்குதிக்குபோவானுகில் அங்குஒரு ஸ்திரீ ஜாதி கையினுல் மரணமடைவாரென்றனர் அதையான்கேட்டுண ர்ந்தவள் ஆதலால் இவரை வடக்குமார்க்கமாப் போகவேண்டா மென்று தடுத்தேன் என்மாமி மாமனுர் சொன்னதையு முறைத் தேன் என்னசொல்லியுங்கேளாமல் ஒரே பிடிவாதமாக பிரயாண ப்பட்டபோது யானும் என் குழந்தையை எடுத்துக்கொண்டு அவ ருடன்கூடப் பிறையாணப்பட்டேன் அப்போதென்னை வரவே ண்டாமென்று அவர் தடுக்கயானும் ஒரேபிடிவாதமாக கூடத்துட

ந்தபோது செட்டியார் இவரும்மனமிறங்கி கட்டுசாதமூட்டை யை அவர்கையி லெடுத்துக்கொண்டு முன்னேநடக்கயானும் குழ ந்தையை யெடுத்துக்கொண்டு பின்னே நடந்து வருகிறபோது அதிக தீட்சண்யமான வெய்யல் காய்வதினாலும் செட்டியார்க்க ண்டு வெய்யல் தாழ்ந்துப் போகலாமென்று எண்ணித் தக்கோ லம் பேறம்பாத்தின் ஆற்றங்கரையோரத்தின் அருகில் இருக்கும் ஆலமரத்தின்கீழ்வந்து குந்தினோம் அப்போதெனக்கு வெய்யலில் வந்த வெடாயினால் நித்திரையானது வந்தபோது யான் குழந்தை யை அருகில்வளர்த்திக்கொண்டு இவர் துடையின்மீது என் தலை யை வைத்துக்கொண்டு நித்திரை போய்விட்டேன்.

அந்தசமயம்பார்த்து என் தலைக்குயரமாக மண்ணைக்குவி த்துவைத்து விட்டு கட்டுசாத மூட்டையையும் எடுத்துக்கொண்டு நடந்துவிட்டார் அதன் பிறகுயான் நித்திரைத்தெளிந்து எழு ந்துப் பார்க்கிறபோது என்புருஷனைக் காணாமையால் நாலுதிக்கி னும் ஓடிப்பார்த்து மருபடியும் ஆலமரத் தண்டையிலே வந்துக் குந்திக் கொண்டு யான் புலம்புகிறபோது, என்னைப்போலொத்த ஒரு ஸ்திரீயானவள் என்னிடம் வந்து என்னை தேற்றி பிறகு என்னுடைய வரலாரைக் கேட்கயானும் ஆதியோடந்தமாக கூறி யபோது அவளும் கேட்டு மனமிறங்கி, இந்த வழியைக்காட்டி இவ்வழியே நேராய்ப் போவையே யானல் உன்புருஷனை கண்டு பிடிப்பாயென்று சொல்லிவிட்டு அவளும் போனபின்பு யானும் அவ்வாறே இவ்வழியைப் பிடித்துக்கொண்டு வருகிறபோது வழி யில் ஓர் தாமரை தடாகத்தின் அருகில் இவர் குந்திக்கொண்டிரு ந்தார், அப்போதுயான் இவரைக்கண்டு இப்படியும் செய்துவிட்டு வாலாமா என்று கேட்டபோது. எனக்குப் பிரிய வசனங்களைச் சொல்லி பின்பு கட்டுசாதமூட்டையை என்னருகில் வைத்துவி ட்டு தடாகத்தில்இரங்கி ஸ்தானம்செய்து நேமநிஷ்டைகளை முடி த்துக்கொண்டு வந்து சாதம் போடுமென்றனர் அப்போது யான் வாருமையா செட்டியாரே நீர் ஸ்தானபானம் செய்து வந்தீரே அடியாள் யானும் ஸ்நானபானம் செய்து வருகின்றேன் என்ற போது அப்படியே செய்து வாருமென்றனர்.

அப்போது யான் குழந்தையை அவர்கையில் கொடுத்து தடா கக் கரையில்இரங்கியான் ஸ்தானம் செய்கிறதருணத்தில் குழந் ந்தையைக் கீழேபோட்டு விட்டு கட்டுசாத மூட்டையை எடுத்துக்

கொண்டு ஓடிவந்துவிட்டார் யானும் ஸ்நானம் செய்து கரையேறிவந்து பார்க்கிறபோது செட்டியாரையும் காட்டுசாதமூட்டையையும் காணாமல் கலங்கி குழந்தையைக் கையில்எடுத்துக்கொண்டு வந்தேன் தாய்தந்தையர்போல் உம்மனைவரையுங் கண்டேன் என்குறைகளை எல்லாம் விட்டேன் என்புருஷனைப்பார்த்து மகிழ்ந்து மனங்களித்தேன் என்று மாயா நீலியாகிய செட்டிப்பெண் கூறினள்.

அவ்வாறுகூறியமாதின் வாய்மொழியை வேளாளர்கள் அனைவரும்கேட்டு மனமிறங்கி செட்டியைப்பார்த்து வாருய் செட்டியாரே இப்போது உன்பெண்சாதி கூறியமொழியில் யாதேனும் பிசகுண்டா இல்லையே நீ இப்படி செய்பலாமா என்று கேட்க, செட்டி வேளாளரைப் பார்த்து வாருமையா வேளாளர்களே அவள் மொழியை கொஞ்சமும் நம்பவேண்டாம் தாமரை தடாகத்தில் அருகில்யான் குந்திக்கொண் டிருக்கையில், இந்தப் பாதகியானவள் என்மனைவியைப்போல வந்துப் பசிப்பியபோது யான் மதிமயங்கி மனையாள்தானென நம்பி பிரியமோடு குழந்தையை வாங்கின உடன் அந்தப்பாழும் குழந்தையானது ராட்சதன் போல் சீறி என் பிடறியைப் பிடித்து அழுத்தியபோது யானும் பயந்து கீழேபோட்டுவிட்டு ஓடி வருகையில் அவள் அகோரமாகிய ரூபத்தை எடுத்துக்கொண்டு என்னை பட்சிக்கும்படியாக துரத்திக்கொண்டுவந்தாள், யானும் அலறி உம்மண்டையில் வந்துசேர்ந்தேன், அவள் பேச்சை பேசவேண்டாம் அப்படி அவள் என்மனைவியாயிருப்பாளாகில், எனக்குக் கலியாணமானபோது வந்திருந்த பேர்களையும் அப்போது நடந்த விசேஷத்தையும் என்னுடைய தாய்தகப்பன் பேரையும், என்பெயரையும் என்பிள்ளை பெயரையும் என்பெண்சாதி பெயரையும் ஆதியோடந்தமாகச் சொல்வாளாகில் ஒருக்கால் நம்புவேனென்றனன்.

அப்போது அங்கிருந்த வேளாளர்கள் எழுபதுபேரும் செட்டிக் கூறியதைக் கேட்டு அந்தட்சணமே அருகிலிருக்கும் நீலியாகிய செட்டிப்பெண்ணைப்பார்த்து, வாருய்மாதே, இப்போதுன்புருஷனாகிய செட்டியார் கூறியதை, கேட்டையா, நீ மனைவியர் இல்லாவெனப் பிடிவாதம் செய்குறார், ஆதலால் நீயிப்போது அவர் இஷ்டத்தின்படியே, உங்களுக்கு விவாகமானபோது வந்திருந்த பந்துமித்திரர்களையும் அப்போது நடந்த விஷயங்களையும் உன் புருஷன் பிள்ளைப்பெயரும் உன்பெயரும் ஆதியோடந்தமாகச்

சொல்வேயேயானல், உன்னை பெண்சாதிஎன்று அழைத்துக்கொண்டு போகுவேனென்றார். ஆதலால் நீலிசெட்டியின் பெண்சாதியே உண்மையானல் சீக்கிரம் சொல்வாய் மாதே என்றனர்.

அம்மொழியைக் கேட்டுணர்ந்த நீலியாகிய செட்டிப்பெண் எழுபதுபேர் வேளாளர்களையும் பார்த்து வாருமையா தகப்பன் தமயன்மார்களே செட்டியார் சொல்வது நியாயமாகுமா இதுயெங்கே யடுக்கும், எங்களுக்குக் கலியாணமானபோது வந்திருந்த பந்துமித்திரர்களையும் அப்போது நடந்த விசேஷங்களையும் யென்பெயரைபும் என்பிள்ளைப்பெயரையும் சொல்ல யாதொரு தடையுமில்லை. மாமி மாமனர் பெயரையும் என் புருஷன் பெயரையும் என்னமாய்ச்சொல்வது, எங்கேயடுக்கும், என்மனம் துடிக்கின்றதே. யென்றுக் காதகநீலியானவள் சொல்லியபோது வேளாளர்கள் அனைவருங்கேட்டு ஆலோசித்து அம்மாது சொல்வதுஞ்சரிதான், மாமிமாமனர் பெயரையும் கொண்ட புருஷன்பெயரையுப், எப்படிச்சொலவாள்என்று அவர்களுக்குள் பேசிக்கொண்டு பிறகு செட்டியைபார்த்து, வாருமையா செட்டியாரே நீர் சொல்வது நியாயமல்ல, மாமி மாமனர் பெயரும் உன்பெயரும் எப்படிச்சொல்குவாள். அதை நீயோசியாமல் சொல்லென்பதுச்சரியல்ல என்றபோது, செட்டியானவன் வேளாளர்களைப் பார்த்து, வாருமையா வேளாளமார்களே, அவள் உண்மையாய் என்மனைவியாயிருப்பாளாகில் அல்லவோ பெயர்தெரியும் சொல்லுவாள். அவள்பேச்சை ஒருக்காலும் நம்பாதீர்கள், அப்படி பெயரைச் சொல்லாவிட்டால். அவள் வந்தவழியைப் பார்த்துக்கொண்டுப் போகச் சொல்வீர்களென்றபோது வேடாளர்களும் தடுத்து. எத்தனையோ விதம்சொல்லியும், செட்டிகேளாமல் ஒரேபிடிவாதமாக பெயரைச் சொல்லவேண்டுமென்றபோது, நீலியாகிய செட்டிப்பெண்ணை அழைத்து வாருய்மாதே. உன்புருஷனகிய செட்டியாருக்கு எத்தனையோவிதம் யெடுத்துக்காட்டி உரைத்தபோதினும் அதனைச் செவியிற் கொள்ளமல் ஒரேபிடிவந்தமாகப் பெயரைச் சொல்லவேண்டுமென்ருள் ஆதலால் அப்படி உனக்கு இஷ்டமிருந்தால் சொல்லும் அல்லாவிட்டால் நீ வந்தவழியைப் பார்த்துக்கொண்டு யோவாய்மாதே என்றனர்.

அப்போதுநீலியாகிய செட்டிப்பெண் வேளாளர்களைப்பார்த்து வாருமையா தாய்தகப்பன்மார்கவிள அப்படி அவர் ஒரேபி

டிவார்தமாகச்சொல்லவேணும் என்றபோது ... 
தபாவம் புண்ணியம் அவளைச் சாருகின்றது. எ... ய
மும் நிறைவேறவேண்டுமென்றுக்கருதி அங்குள்ளசபையோர்க
ளும் தன்புருஷனுங் கேட்கும்படியாக கலியாணமானபோது வந்
திருந்த பந்துமித்திரர்களுடைய பெயரையும் அப்போது நடந்த
விசேஷத்தையும் ஆதியோடந்தமாகச்சொல்லி, பிறகு மாமிமாம
னர் பெயரையும் பிள்ளை பெயரையும் தன்பெயரையும் சொல்லி,
புருஷன் பெயரையும், எள்ளுக்காய் பிளந்தாற்போல் தினகரசெ
ட்டியார் என்று சொல்லியபோது அருகிருந்த. செட்டியானவன்
கேட்டு, அடடா இவளாபெண்ஜாதி உண்மையில் என் பெண்சா
தியாக இருப்பாளாகில் என்ன உயிர்வதை செய்தாலும் என்தலை
யில் இடித்தாற்போல் என்பெயரைச் சொல்லுவாளா, இவள் என்
பெண்சாதியல்லவென்று, ஏடாகூடமாக மருத்துப்பேசியபோது.
வேளாளர்கள் எழுவதுபேரும் செட்டியைப்பார்த்து வாராய் செ
ட்டியாரே நீ சொல்லச் சொன்னதின்பேரில் சொன்னாளேயல்லது
தானாகச் சொல்லவில்லையே அப்படியிருக்க இப்போது நீ பேசு
வது யேடாகூடமான வார்த்தையாயிருக்கின்றது ஆதலால் நாங்க
ளும் காலையில்வந்து கூட்டங்கூடினவர்க்கு எங்களுடையக்காரி
யம் ஒன்றும் முடிவாகவில்லை, எங்களிருவருடைய தொடுவழக்கம்
தீர்ந்து சமாதானமாகவில்லை, சூரியனும் மேற்றிசையிற்போய்
மறைந்தான், தீபம்வைக்கப்போகிறபடியால். யாங்களும் எங்கள்
வீட்டிற்குப்போகவேண்டும், ஆகையால், நீயும்-உன் பெண்சாதி
யும் இன்றுராத்திரி முழுதும் இந்தக் காளிக்கோவிலுக்குள் இரு
ங்கள்-யாங்களும் கதவைச்சாற்றிக்கொண்டுபோய் நாளைகாலையில்
வந்து திரந்து உங்கள் வழக்கை தீர்த்துவிடுகிறோமென்றனர்.

அம்மொழியைக் காதுற்றுக்கேட்டுணர்ந்த செட்டியானவன்
என்ன எண்ணுகிறானெனில், நம்மிடம் மந்திரவாளிருக்கின்றது
இவளை இன்று இராத்திரிக்குள்ளே கொன்றுவிடலாமென்று நினை
ந்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு, வேளாளர்களைப்பார்த்து
வாருமையா வேளாளர்களே, உங்கள் இஷ்டத்தின்படியே செய்
யுங்கள், என்றனன், அப்போது வேளாளர்கள், செட்டிப்பெண்
ணைப்பார்த்து வாரும்மாதே இப்போது யாங்கள் கூறியது சம்ம
திதானாவென்றபோது நீலியாகிய செட்டிப்பெண், வேளாளமார்
களைப்பார்த்து வாருங்களையா தாய்தந்தைமார்களே, நீங்கள்சொ

எ… …ுளிருக்க யாதொரு தடையுமில்லை, என்புரு ஷ… …டியாரிடத்தில் மந்திரவாள் ஒன்றிருக்கிறது அந்த வாள் அவர்கையில் இருக்குமாகில். என்னைக்கொன்று போடுவார் ஆதலால் அந்தவாளை என்கையில் வாங்கிக் கொடுப்பீராகில் யான் உங்கள் மொழிக்கடவாமல், ஆலயத்தினுள் பிறவேசித்து என்க ணவனோடு இருக்கின்றேனென்றனள், அம்மொழியைக் கேட்டுண ர்ந்த வேளாளர்கள் அனைவரும், செட்டியைப்பார்த்து, வாருய் செட்டியாரே, உம்மிடத்தில்மந்திரவாள் இருக்கின்றதாமே அதை இராத்திரிபொழுதிற்கு உன்-பெண்சாதியிடம் கொடுத்து வை யும், காலையில் வந்து உன்வாளைவாங்கி உன்கையில் தருகிறோம் என அதனை செட்டியானவன்கேட்டு திடுக்கிட்டு திகிலடைந்துக் கையுங்காலும் விடவிடவென்று உதரலெடுக்க, வேளாளர்களைப் பார்த்து வாருமையா வேளாளர்களே மந்திரவாளைக் கொடுக்க யாதொரு தடையுமில்லை அப்படி உங்கள் வார்த்தையைக்கேட்டு கொடுத்து விடுவேனேயாகில் என்பிராணன்எமபுரம் போய்ச்சே ர்ந்து விடும் அது உண்மைஎன்றனன்.

அதுகேட்டு எழுபதுபேர் வேளாளரும் ஒருமித்து செட்டி யைப் பார்த்து வாருமையா செட்டியாரே நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் அப்படி உன் உயிர்போகுமாகில் யாங்கள் எங் கள் எழுபதுபேர் உயிரையுங்கொடுக்கின்றோம் நீ யாதொன்றுக் கும் பயப்படவேண்டாமென செட்டியானவன் கேட்டு மகாதுய ரத்தோடு யாது சொல்லுகிறுனெனில் என்னுயிர்போனால்நீங்கள் உங்கள் எழுபதுபேர் உயிரையும் கொடுப்பதாக வாய்மொழியா கச்சொல்வது சரியல்லபத்திரம் எழுதி அதில் உங்கள் எழுபது பேர் பெயரை அதில்எழுதிப்பொதுவாக ஒருவர்கையில் கொடு த்துவைப்பீராகில் மந்திரவாளை கொடுப்பேன் என்றனன் அது கேட்டு வேளாளர் எழுபதுபேரும் அவ்வாறே சம்மதித்து பத்திர மெழுதி பொதுவாக ஒருவர்கையினில் கொடுத்தனர் அப்போது செட்டியும் மனமுருகிஐயையோ நம்பெண்சாதிப்பேச்சை கேளா மல்வந்ததினுல் நமக்கு இப்பேர்க்கொத்த யிடர்வந்துசம்பவித்து இன்றுராத்திரிக்கு நமதுபிராணன்போய்விடுவது நிச்சயமென்று தீர்மானித்துக்கொண்டு மந்திரவாளை உருவிவேளாளர்கள்கையில் கொடுக்கவேளாளர்களும் அதைவாங்கி நீலியாகியசெட்டிப்பெண் கையிற் கொடுத்து பின்பு இருவரையும் காளிக்கோவிலுக்குள்ளே பிரவேசிக்கும்படி செய்து கதவைசாற்றி தாள்போட்டுப்பூட்டிக்

கொண்டு அவரவர்கள் அரண்மனைக்குப்போய் சேர்ந்து போஜன முதலானதும் புசித்து சயனித்து நித்திரைபோயினர்.

இவர்கள் இப்படியிருக்க அங்ஙனம் காளிகோவிலுக்குள்பிர வேசித்த இருவரில் நீலியானவள் ஆவெனக்கர்ஜ்ஜித்து சீரி அகோ ரமாகிய ரூபங்களை எடுத்து செட்டியின் குடலைப்பிடுங்கிமாலையா கப் போட்டுக்கொண்டு கோபுரவாசலில் நின்று மேலே கிளம்பி கீழேவிழுந்தன அந்தவழியாக நீலியானவள் கிளம்பி வெளியே வந்து ஒருவர்கண்ணிற்கும் புலப்படாமல் மறைந்திருந்தாள்.

அப்படியிருக்கிறபோது கங்குலானது கடந்து கதிரவன் கிழ க்குதிக்கில் உதையமாக அப்போது வேளாளர்கள் நித்திரைநீங்கி எழுந்து அவரவர்கள் காலக்கடனை முடித்துக்கொண்டு அனைவ ரும் சபாமண்டபம் வந்து சேர்ந்தாரகள் அப்போது அவர்கள் என்னபேசிக்கொள்ளுகிறார் எனில் நேற்றையதினம் சாயரட்சை செட்டியையும் செட்டிப் பெண்சாதியையும் காளிகோயிலுக்கு ள்ளே இருக்கும்படியாகச்செய்து கதவைச்சாற்றி தாள்போட்டு பூட்டிக்கொண்டு போனோமே எவ்வாறிருக்கின்றார்களோ அவர் களைப்போய் பார்த்துவருவோம்வாருங்களென்று எழுபது பேர் வேளாளர்களும் ஒன்றாகக்கூடி காளிகோயிலுள்புரவாயலில்நின்று பார்க்கிறபோது அவர்கள்சாற்றிப்பூட்டிய படியேயிருக்கக்கண்டு சந்தோஷமுடையவராய் பூட்டைத்திறந்து தாளைக்கழட்டிகதவை த்திறக்க கதவுதிறக்காதிருக்க வேளாளர்கள் அனைவரும்கண்டுதிடு க்கிட்டு இது என்ன ஆச்சர்யமாகயிருக்கின்றதே என்று செட்டி யையும் செட்டிப்பெண்ணையும் பேரிட்டழைக்க பதில்கிடையாம லிருக்க அனைவரும் பிர்மித்து நின்றனர்

அப்படி நின்ற வேளாளர்கள் எழுபதுபேரும் சற்றுநேரம் ஆலோசித்து பிறகு காளியை நினைந்து ஸ்தோத்திரம் பலவாறாக செய்கிறபோது காளியினுடையக் கிருபானுகூலத்தினால் கதவா னது படாலென்று திறந்தன அப்போது வேளாளர்கள் எழு பதுபேரும் ஆலயத்தினுள் பிரவேசித்து பார்க்கிறபோதுசெட்டி வயர்கிழிந்து மாண்டுகிடப்பதையும் செட்டிப்பெண்இல்லாததை யும்பார்த்து தேகமாதியந்தமும் நடுநடுங்க ஆலயமுழுதிலும்செட் டிப் பெண்சாதியைத்தேகிப்பார்த்து மனம் வேர்த்துபிறகு செட் டியின்பிரேதத்தை யெடுத்து அடக்கம் செய்துவிட்டு அனைவரும் சபாமண்டபம் வந்தார்கள்.

அப்படிச்சேர்ந்தவர் ஒருவருக்கொருவர் என்னபேசிக்கொள்ளுகிருறெனில்செட்டிசொன்ன வார்த்தையை நாம் கேளாமல் பெண்பாவம் பெண்தோஷமென்றெண்ணி அந்தசெட்டிப்பெண் பேச்சையே உறுதியாக நம்பி செட்டிகையிலிருந்த மந்திரவாளேயும் பிடிங்கி அவள்கையில் கொடுத்து விட்டோம் செட்டிஉயிர் போனால் நாம்எழுபதுபேரும் உயிர்விடுகிறோமென்று எழுதியுங் கொடுத்தோம் இப்போது அந்தசெட்டிக்கு வாரீஸ்தார்கள்யாராவது வந்துக்கேட்டால் நாமென்னச்சொல்லுகிறது முன்பின் அறியாமல் மோசம்போனேமே என்று அவரவர்கள் மனமானதுவாடி மதிமயங்கி யிருந்தார்கள்.

# நீலி செட்டியின் தாயார்

## போல் ரூபமெடுத்துக்கொண்டு

### வேளாளர்களிடம் வருதல்.

இவ்வாருக எழுபதுபேர் வேளாளர்களும் ஏக்கம்பிடித்துக் கொண்டு இருக்கிறசமையத்தில்நீலியானவள் தளர்ந்தவயதுடைய கிழவியைப்போல் ரூபமெடுத்துக்கொண்டு கையில்தடியைப்பிடித்து தள்ளாடி நடந்து வேளாளர்கள் வீற்றிருக்கும் சபாமண்டத்தினருகில் வந்து அவர்களைப்பார்த்து என்மகனைப்பார்த்தீர்களா இன்றைக்கு வீடுவிட்டுவந்து எட்டுநாளாயிற்று நாலுநாளில் வீடு வந்து சேருகிறேனென்று சொல்லிவிட்டு வந்தவன் வாராமையினால் நான் தேடிக்கொண்டுவந்தேன் நீங்கள் கண்டிருந்தால் என் கண்ணில் காட்டுங்களென்றனள்

அப்போது வேளாளர்கள் எழுபதுபேரும் திடுக்கிட்டுசற்று நேரம் ஆலோசித்து கிழவியைப்பார்த்து வாருயம்மா உன் மகன் என்னகாரணத்திற்காகஇங்குவந்தான் அவன்பெயரென்ன அவன் தனியாகவந்தானு அல்லது அவன் பெண்சாதி பிள்ளையோடு வந்தானு அதையாவும் யாங்கள் அறியும்படி சொல்வாயானுல்பின்பு உன் குமாரனுடைய சங்கதியைத் தெரிவிக்கிறோமென்றனர்.

அதுகேட்டு நீலியாகியக் கிழவிவேளாளரைப்பார்த்து வாருங்களப்பா என்மகன் என்ன காரணத்திற்காக இங்கு வந்தானெ

னில் யாரோவொரு பெண்பிள்ளையானவள் காசிக்குக் கலம் நெ
லும் துட்டுக்கொரு சேலையுமாக விற்பதாய் கேழ்விப்பட்டு விய
பாரம் செய்யப் பிரயாணப்பட்டபோது நானும் அவன் பெண்
சாதியும் வேண்டாமென்று தடுத்தோம் ஏனெனில் இவன் வட
க்கே போனால் ஒரு ஸ்திரீஜாதிகையில் மரணமாவானென்று ஜாத
கத்தி லிருந்தமையால் அதையிவன் கேளாமல் என்னையும் என்
மருமகளையும் வீட்டில்விட்டுவிட்டு தடுத்தோம் தனியாக வந்துவி
ட்டான் யாங்களிருப்பதோ காஞ்சிபுரம் என்பிள்ளையோ தினக
ரசெட்டி இன்னம் ஏதாகிலும் கேட்கவேண்டிய திருந்தால் கேளு
ங்கள் அதையும் சொல்லுகிறேனென்றனள்.

நீலியாகியக் கிழவி கூறியதைக்கேட்டு எழுபதுபேர் வேளா
ளர்களும் குடல்நடுங்கி ஒன்றும் சொல்ல வாய்வராமல் சற்றுநே
ரம் பிரமைக்கொண்டவர்போலிருந்து பிறகு நீலியாகியக் கிழவி
யைப்பார்த்து வாறுமம்மாபாட்டி உன்மகன் இங்குவந்தது மெய்
தான் அவனோடு அவன்பெண்சாதியைப்போல குழந்தை ஒன்
றைக் கையிலெடுத்துக்கொண்டுவந்தாள் அப்படி வந்த இவர்கள்
இருவரும் வழக்காடியபோது அவர்களை நாங்கள் அழைத்து விசா
ரிக்கின்றபோது உன்மகன் என பெண்ஜாதியல்ல வென்றனன்
அவள் என்புருஷன்தான் என்றனள் இப்படி வழக்காடிக்கொண்டு
யிருக்கிறபோது சூரியன் மேற்கு திசைபோய் மறைந்தான்.

அப்போது நாங்கள் இவர்கள் இரண்டுபேரையும் காளிகோ
யிலுக்குள் போயிருங்கள் நாளையதினம உங்கள் வழக்கை தீர்க்கி
றோமென்றோம் அபபடியே உன்மகன சம்மதித்தபோது அவள்
சம்மதியாயிருக்க யேனென்றால் அவர்கையில் மந்திரவாளிருக்கி
ன்றதே அந்தவாளினால் என்னைக்கொன்று போடுவார் ஆதலால்
அந்த மந்திரவாளை வாங்கி என்கையில் கொடுப்பீராகில் ஆலயத்
திற்குள் பிரவேசிப்பேனென்றாள்.

அப்போது உன்மகன்மந்திரவாளை அவள்கையில் கொடுமெ
ன்றபோது உன்மகன் கூறியது யாதெனில் உங்கள் வார்த்தைக்
கடவாமல் மந்திரவாளை கொடுத்துவிடுகிறேன் அப்படி கொடுத்
துவிடுவேனானால் என் வுயிர்போய்விடும் என்றபோது அதையாங்
கள் யோசியாமல் பெண்பாவம் பெண்தோஷமென்றெண்ணி ப்அ
படி உன்உயிர்போனால் எங்கள் எழுபதுபேர் உயிரையும் கொடு
க்கிறோமென்று பத்திரமெழுதி பொதுவாக ஒருவர்வசம் ஒப்பி

வத்து பிறகு மந்திரவாளை வாங்கி அவள் கையில்கொடுத்து இருவரையும் ஆலயத்திற்குள் பிரவேசித்திருக்கும்படி செய்வித்து கதவைசாற்றிப் பூட்டிகொண்டுபோய் பொழுதுவிடிந்து வந்துப்பார்க்கையில் அந்தபாதகி உன் குமாரனைக் கொன்றுப்போட்டுவிட்டு மாயமாய் மறைந்துபோயினள் யாங்களும் உன் குமாரன் பேச்சைக்கேளாமல் மோசம்போய் விட்டோம் இந்தா உமது குமாரனுக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் என்று நீலியாகிய கிழவிகையில் கொடுத்தனர்.

அதையவள் வாங்கிக்கொண்டு பின்புமகனேமகனேயென்று மண்மேல் விழுந்துப்புரண்டு ஒப்புக்கு அழுகிறபோது வேளாளர்கள் எழுபதுபேருங்கண்டு கிழவியை தேற்றி பாட்டி இனி விசனப்படுவதில் யாவது ஒன்றுமில்லை, யாங்கள் எழுதிக்கொடுத்த உறுதிமொழியின்படி எங்களாவியை விடுகிறோம் பாறுமம்மாபாட்டி என்று எழுபது பேரும் ஒரேமொழியாகக் கூறியபோது நீலியாகியக் கிழவிக்கேட்டு ஒப்புக்குச் சொல்லுகிறாள் குழந்தை செத்ததுமல்லாமல் குழிதோண்ட இரண்டு பணம் தெண்டமென்பதுபோல் என்மகன் தான் இறந்துபோனான் ஐயோ பாவம் நீங்களேன்கூட சாகப்போகிறீர்கள் போம் போம் பயித்தியக்கார்பிள்ளைகளா என்றனள்.

அப்போ வேளாளர்கள் எழுபதுபேரும் (நீலியாகிக் கிழவியைப்பணிந்து வாருய் பாட்டி நாங்கள் சொன்னசொல்லை ஒருக்காலும் பிசகமாட்டோம் அம்மாவென்று உடனே குழிவெட்டித் தீயைமூட்டி கிழவிபார்க்கும்படியாக எழுபதுபேரும் தீயில்பாய்ந்தனர், அதுகண்டு நீலியாகியக் கிழவிக்கு அதிக சந்தோஷமுண்டாகி நாம் சபதம்செய்துக் கோரிவந்தகாரியம் நிறைவேறிற்று மனமகிழ்ச்சியோடு தன்னுடைய சுயரூபத்தை எடுத்துக்கொண்டு தமயனாகிய நீலனிடம்வந்து நடந்த சமாச்சாரங்களை எல்லாம் ஆதியோடந்தமாக உரைத்து ஆலயத்திலிருந்துக்கொண்டு நாள்தோறும் ஊரை அதா அதம்பண்ணிச்கொண்டிருந்தாள்.

# நீலி கதை.

## பரமசிவன் நீலியிடம் வருதல்.

இப்படி யிருக்கிறபோது கயிலாயப்பதியாகிய பரமசிவன் அறிந்துநீலியிடம்வந்து வாருய்மாதேநீ பழிக்குப்பழிசெட்டியை வாங்கினது சரிதான்அநியாயமாக எழுபதுபேர் வேளாளரையும் கொன்றது சரியல்ல என்று எழுபதுபேர் வேளாளரையும் எழுப்பிவிட்டு நீ திருவாலங்காட்டில் வாழும்படியாக வரமளித்து நீலியின் ஆக்கிறஷத்தையும் அடக்கியபோது பார்வதாதேவி பரமசிவனைத் தோத்திரஞ்செய்ய பரமசிவனும் திருவுளம்பற்றி பார்வதாதேவியை விடையிலேற்றிக்கொண்டு கயிலாயம்போய்ச் சேர்ந்தனர். சுபம்-சுபம்-சுபம்.

## வாழி விருத்தம்.

கதிர்மதியோடுகதவர் கருதுசீர்ரிஷிகள்வாழி
பதிவளரரசரேடுப் பாரெலாந்தழைத்துவாழி
கதைதனையெழுதிஞேருங் காதலாய்படித்தோர்வாழி
இதமுடன்அச்சிலிட்ட ஜெயராமும்தான்வாழி.

திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்கும்

நீலிகதை முற்றிற்று.

[library stamp] சென்னை-600 008
180295

# விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரி ப்ப தென்னவெனில், சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன் பேட்டை பெருமாள்கோவில்தொட்டத் தெருவு 20-வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் "ஆதிமூலவிலாச அச்சுக் கூடத்தில்,

| | | | |
|---|---|---|---|
| பண்டரி கீர்த்தனை ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீராமலீலா அல்லது ஸ்ரீமத் ராமாயண சம்பூரணம் ... ... | 0 | 6 | 0 |
| சரஸபூஷண சரித்திரம் ... ... | 0 | 4 | 0 |
| கூலிக்கு தாலிகட்டினகதை ... | 0 | 4 | 0 |
| 6-பாஷைகளின் ஒக்கபில்லரி... ... | 0 | 4 | 0 |
| ஷை தெலுங்கு ... ... | 0 | 4 | 0 |
| சுந்தரகாண்டம் லங்காதகனம் ... | 0 | 4 | 0 |
| கெர்ப்ப சாஸ்திரம் ... ... | 2 | 0 | 0 |

மார்க்கண்டேயர் சரித்திரம் அச்சிட்டுவருகிறது. கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

புத்தகங்கள் வேண்டுவோர்க்கு வி. பி. ஒன்று இரண்டு
த்தகங்கள் ஆர்டர் ...ய்கிறீர் அதற்கு புத்தக விலை 4-
அணா ஆனால் தபால்சார்ஜ் 4-அணா ஆகுறது ஆகையால்
த்தகம் வேண்டுபவர்களுக்கு நட்பெட்டாக அனுப்பப்
ம். நீர் 1-அணா கொடுத்து வாங்கிக்கொள்ளவும் அல்
ல்படிக்குபோனால் அரையணா ஸ்டாம்பு நாங்கள் ஒட்டி
பினால் மத்தியில் போக்குபோய் விடுகிறது. அதற்கு
கிடையாது. நாங்கள் அனுப்பிய புத்தகங்கள் வர
ன்று எங்களுக்கு கடிதம் எழுதுகிறீர்கள். அதற்
தகம் தேவையானவர்கள் புத்தகக்கிரயம் அனுப்பி
வேண்டியது. எங்களிடமிருந்து ! நட்பெட்டாக
படும்.

இப்படிக்கு,

**பே-ஆதிமூலமுதலியார்.**

ள்கோவில் தோட்டம் தெருவு நெ. 20-வது
வுக்கார்பேட்டை போஸ்ட்டு மதராஸ்.